*கவனிக்க .- 2015.07.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1927 - 2015 අගෝස්තු මස 07 වැනි සිකුරාදා - 2015.08.07**

*1927 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1096 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2015, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஓகத்து மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

வடமேல் மாகாண மாகாண சபை

வடமேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் .................... ஆம் இலக்க, மாகாண வீதி அபிவிருத்தி நியதிச்சட்டம்

இங்கு கீழ்க் குறிப்பிடப்படுகின்ற வடமேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் ........... ஆம் இலக்க, மாகாண வீதி அபிவிருத்தி நியதிச்சட்டம் இன்றைய திகதியிலிருந்து முப்பது நாட்கள் கடந்ததன் பின்னர் வடமேல் மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்படுமென இத்தால் அறிவிக்கின்றேன். எவரேனும் ஒருவருக்கு இந்த நியதிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் தொடர்பில் முன்வைப்பதற்கு ஏதேனும் விடயங்கள் இருப்பின் குறித்த திகதிக்கு முன்னர் எனக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

ஆர். பி. டீ. குணதாச தெஹிகம,
வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி,
போக்குவரத்து, மின்வலு, வீடமைப்பு,
நிர்மாணத்துறை அமைச்சர்.

வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி,
போக்குவரத்து, மின்வலு, வீடமைப்பு,
நிர்மாணத்துறை அமைச்சு,
மாகாண சபை அலுவலக கட்டடத்தொகுதி,
கீழ்மாடி,
குருநாகல்,
2015, யூலை 21.

**வடமேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின்**
**................. ஆம் இலக்க வீதி அபிவிருத்தி நியதிச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் 9 ஆம் அட்டவணையின் 6 ஆம் பிரிவு பிரகாரம் மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளதும் இந்த நியதிச் சட்டத்தின் III ஆம் பகுதியில் மாகாண சபை வீதிகள் என விபரிக்கப்பட்டுள்ளதுமான வடமேல் மாகாணத்தில் உள்ள ‘சீ’ மற்றும் ‘டீ’ தர வீதிகளின் அவற்றிலுள்ள பாலங்களின் கடவுத்துறைகளின் திட்ட அமைப்புக்களின் வடிவமைப்பு, நிருமாணம், அபிவிருத்தி, புனரமைப்பு, பராமரிப்பு, எல்லைகளை நிர்ணயித்தல் அத்துடன் இடைநேர் விளைவான விடயங்களுக்காகவும் ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டும் வடமேல் மாகாண மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வடமேல் மாகாண பிராந்திய வீதி அபிவிருத்தி அதிகாரசபை நியதிச்சட்டத்தை இல்லாதொழிக்கும் பொருட்டிலுமான நியதிச் சட்டமொன்றாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் 1 ஆம் நிரலில் (மாகாண சபை) உள்ள ஏதேனும் விடயமொன்று சம்பந்தமாக நியதிச்சட்டங்களை ஆக்குவதற்கு ஆரசியலமைப்பின் ஊடாக மாகாண சபைகளுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளமையினால் இந்த நியதிச் சட்டம் 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொது வழிவகைகள் சட்டத்துக்கு முரணாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக: -

சுருக்கப் பெயர்.

1. இந்த நியதிச்சட்டம் வடமேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் ............... ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி நியதிச்சட்டம் என அழைக்கப்படும்.

நடைமுறைக்கு வரும் தேதி.

2. வடமேல் மாகாண மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் வடமேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற அத்தகைய தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நியதிச்சட்டத்தின் நோக்கம்

3. இந்த நியதிச் சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறாகும்.

(அ) வடமேல் மாகாண சபைக்குரிய ‘சீ’ மற்றும் ‘டீ’ வீதிகள் அத்துடன் அவற்றிலுள்ள பாலங்கள், கடவுத்துறைகள், திட்ட அமைப்புகள் போன்றவற்றின் வடிவமைப்பு, நிர்மாணிப்பு, அபிவிருத்தி, மேற்பார்வை, இவை தொடர்பில் மதியுரைச் சேவை வழங்குதல், பராமரித்தல், பராமரிப்பு மேற்பார்வை, இவை தொடர்பில் மதியுரைச் சேவை வழங்குதல், வீதி எல்லைகளை நிர்ணயித்தல் என்பன சார்பில் ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் வடமேல் மாகாண மக்களுக்கு இலங்கையில் பொது வீதி வலையமைப்பு மற்றும் மாகாணத்தினுள் அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வீதிகள் உட்பட ஏனைய கிராமிய வீதிகளுடன் இணைந்த நவீன வீதி முறைமையொன்றை ஆக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(ஆ) வீதிகளின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு தொடர்பில் மாகாணத்தினுள் அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் தேவையான மதியுரை மற்றும் சேவைகளை, மதியுரைக் கட்டணங்கள், நிதி ஏற்பாடுகள் வழங்கப்படும் அடிப்படையில் வழங்குதல்;

(இ) வடமேல் மாகாண சபையினுள் வடமேல் மாகாண வீதி அபிருத்தி திணைக்களத்தை தாபித்தல்;

(ஈ) வடமேல் மாகாண வீதி மதியுரை சபையைத் தாபித்தல்;

(உ) வடமேல் மாகாண வீதி நட்டஈட்டு குழுவைத் தாபித்தல்.

## பாகம் I

### மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தைத் தாபித்தல், அதன் கட்டமைப்பு, தத்துவங்கள் மற்றும் பணிகள்

4. இந்தத் திணைக்களமானது இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையுமுடைய அதன் பெயர் கொண்டு வடமேல் மாகாண சபை வீதிகளுக்குரிய அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் வழக்கு தொடர்வதற்கும் அதற்கெதிராக வழக்கு தொடரப்படுவதற்கும் வேறு சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக விளக்கமளிப்பதற்கும் தத்துவமுள்ள கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாகும். *திணைக்களம் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றென.*

5. இந்தத் திணைக்களம் மாகாணப் பணிப்பாளர் ஒருவரையும் பிரதிப் பணிப்பாளர்கள் இருவரையும் நிறைவேற்றுப் பொறியிலாளர்களையும், தலைமையக பொறியிலாளர்களையும், ஏனைய உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். *திணைக்களத்தின் கட்டமைப்பு.*

6. வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை பிரயோகிப்பதற்காக 'வடமேல் மாகாண வீதி பணிப்பாளர்'என்னும் இலங்கை பொறியியலாளர் சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்த உத்தியேத்தர் ஒருவர் வடமேல் மாகாண பிரதான செயலாளரின் சிபாரிசின் மீது மாகாண ஆளுநரினால் நியமிக்கப்படுதலும் வேண்டும். *பணிப்பாளரை நியமித்தல்.*

7. மேல் 5 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிப் பணிப்பாளர்களும் பொறியியலாளர்கள் அனைவரும் இலங்கை பொறியியலாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களாவதோடு, மாகாண வீதி பணிப்பாளரினதும் வடமேல் மாகாண பிரதான செயலாளரினதும் சிபாரிசின் மீது மாகாண ஆளுநரினால் நியமிக்கப்படுதலும் வேண்டும். *ஏனைய பொறியியலாளர்களின் நியமனம்.*

8. இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் அரசாங்க சேவையாளர்களாக கருதப்படுதல் வேண்டும். மாகாணப் பணிப்பாளரின் கட்டளைக்கு அமைவாக செயலாற்றும் எந்தவொரு உத்தியோகத்தரினாலும் தனது பதவிநிலையில் இதற்குரியதாக செய்த அல்லது செய்யாத எவையும் சம்பந்தமாக அவருக்கு எதிராக அவருடைய சொந்தப் பெயரின் கீழ் எவ்வித சிவில் அல்லது குற்றவியல் வழக்கொன்றைத் தொடர்வதற்கோ அல்லது நடாத்திச் செல்வதற்கோ இயலாது. *அரசாங்க சேவையாளர் கடமைகளை புரிகையில் ஏற்புடையதாகும் ஏற்பாடுகள்.*

9. வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிகள் பின்வருமாறாகும் :- *திணைக்களத்தின் பணிகள்.*

1. வரையறுக்கப்பட்ட வளங்கல், நவீன தொழில்நுட்பம், துறைசார்ந்த தேர்ச்சி முதலியவற்றை பயனுள்ள வகையில் முகாமித்து வடமேல் மாகாண வீதி முறைமையை வினைத்திறனுடன் போக்குவரத்து செயற்பாட்டுக்கு பயன்படுத்துதலும் இற்றைப்படுத்தி பேணுதலும்;

2. மாகாண வீதி முறைமையை புனரமைத்தல், மேம்படுத்துதல், திருத்துதல், பராமரித்தல் போன்றவற்றுக்கு சந்தர்ப்பத்திற்கேற்ப திட்டங்களை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்;

3. மாகாண வீதி முறைமையின் வீதி ஒதுக்க எல்லைகளை நிர்ணயித்தலும் பாதுகாத்தலும்;

4. மாகாண வீதி முறைமைக்கு அல்லது வீதி ஒதுக்கங்களுக்கு சேதம் விளைவிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்;

5. பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்கள், மாவட்ட மற்றும் மாகாண வீதி பாதுகாப்பு குழுக்கூட்டங்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் முதலியனவற்றின்போது திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்;

6. மாகாண வீதி முறைமைக்கு வெள்ளப்பெருக்குப் போன்ற இயற்கை அனர்த்தம் காரணமாக ஏற்படும் சேதங்களை புனரமைத்தல் அல்லது நிருமாணிப்பொன்று அல்லது அபிவிருத்தியொன்று சார்பில் மாகாணசபை அல்லது வேறு நிறுவனமொன்று மூலம் வழங்கப்படும் நிதி ஏற்பாட்டிற்குள் திட்டங்களை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்;

7. திணைக்களத்தின் விடயநோக்கெல்லைக்குரிய தகவல் முறைமையை வருடாந்தம் தயாரித்தலும் இற்றைப்படுத்தி பேணுதலும்;

8. மாகாணசபை வீதியொன்று அல்லது வீதிகள், மாகாண சபையினால் வழங்கப்படாத நிதி ஏற்பாடு அல்லது பிற விசேட கருத்திட்டம் ஒன்றின் மூலம் புனரமைப்பதற்கு அல்லது விருத்தி செய்வதற்கு அல்லது அதன் பின்னர் பராமரிப்பதற்கு எண்ணும் ஏதேனும் நிறுவனமொன்றுக்கு அமைப்பொன்றுக்கு அல்லது குழுவொன்றுக்கு மதியுரைச் சபையின் அங்கீகாரத்தின் மீது நிபந்தனைகளுடன் அதற்காக அனுமதி வழங்குதல்.

நியதிச் சட்டத்தின் ஏற்புடைமை.

10. இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இந்த நியதிச்சட்டத்தில் வடமேல் மாகாண சபைக்கு சொந்தமான 'சீ'மற்றும் 'டீ'தர வீதிகள் உட்பட அவற்றிலுள்ள பாலங்கள், கடவுத்துறைகள், திட்ட அமைப்புக்கள், அவற்றுக்குரிய சொத்துக்கள், கருவிகள் அத்துடன் வீதி ஒதுக்கங்கள் ஆகியவற்றுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதலும் நிருவகித்தலும்.

11. (1) இதனகத்து பின்னர் 'திணைக்களம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வடமேல் மாகாண சபையில் தாபிக்கப் பட்டுள்ள மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு, அமைச்சரின் அத்துடன் /அல்லது செயலாளரின் பொதுவான பணிப்புரைகள் மற்றும் கொள்கை வழிகாட்டுநெறிகளுக்கு அமைவாக இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய அரசாங்க திணைக்களங்களினதும் நிறுவனங்களினதும் அத்துடன் /அல்லது மாகாண சபை திணைக்களங்களினதும் நிறுவனங்களினதும் கலந்தாலோசனையுடன் இந்த நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் நிருவகிப்பதற்குமான புறநீங்கலான தத்துவத்தைக் கொண்ட நிறுவனமொன்றாக வடமேல் மாகாண சபையின் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் தாபித்தலானது இதன்மூலம் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

(2) இந்த நியதிச்சட்டத்தினால் இந்த திணைக்களத்துக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிக்கலாம்.

மாகாண வீதிகளை வெளிப்படுத்துதல்.

12. (1) அமைச்சர் II (2) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, அரசாங்க வர்த்தமானியில் IV ஆம் பகுதியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் 15(1) ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படும் மதியுரைச் சபையுடன் கலந்தாலோசித்து மாகாணத்திலுள்ள ஏதேனும் வீதியொன்றை இந்த நியதிச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் வீதியொன்றாக வெளிப்படுத்தலாம்.

ஆயினும், இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் மாகாண சபைக்குச் சொந்தமான வீதியொன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ள 1 ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வீதிகள் இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் மாகாண சபை வீதியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) மேல் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட வீதி ஒவ்வொன்றும் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வீதி ஒவ்வொன்றும் திணைக்களத்தால் வருடாந்த நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் இயலுமான வரை உயர் நிலையில் பேணப்படுதல் வேண்டும்.

(3) இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வீதி ஒன்று கால்வாய் அல்லது ஆறு ஒன்றினை உள்ளடக்குதல் வேண்டும்.

உத்தியோகத்தர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்கள்.

13. (1) செயலாளரின் பொதுவான நிருவாகத்திற்கு அமைவாக இந்த நியதிச் சட்டத்தில் அல்லது இதற்கு இடைநேர்விளைவான விடயங்கள் சார்பில் விதித்துரைக்கப்படும் கட்டளைகளை அல்லது ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் தத்துவம் மாகாண பணிப்பாளருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.

(2) திணைக்களத்தின் பொதுவான பணிக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக மாகாணப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், தலைமையக பொறியியலாளர், நிறைவேற்று பொறியியலாளர் என்போர் இந்த நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் செயற்பாட்டிற்கும் நிருவாகத்திற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும். நிறைவேற்றுப் பொறியியலாளரின் தத்துவங்கள் இயைபுள்ள நிறைவேற்று பொறியியலாளர் பிரிவுக்கு வரையறுக்கப்படுவதோடு, நிறைவேற்று பொறியியலாளர் பிரிவுகளின் எல்லைகள் காலத்துக்குக்காலம் மாகாண பணிப்பாளரினால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) விடயத்துக்கேற்ப பிரதிப் பணிப்பாளருக்கு, தலைமையக பொறியியலாளருக்கு, நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அல்லது எவரேனும் அலுவலருக்கு அல்லது இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்கு அமர்த்தப்படும் எவரேனும் ஆள் ஒருவருக்கு, நிறுவனமொன்றுக்கு அல்லது அமைப்பொன்றுக்கு அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பணியை கையளிப்பது மாகாண பணிப்பாளருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

14. இந்த நியதிச்சட்டத்தின் II ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மதியுரைச் சபையினால், வீதித் தரையின் ஆகக்குறைந்த அகலம் 3.7 மீற்றர்களும் இருபக்கங்களிலும் வீதி ஒதுக்கங்களுக்கும் கால்வாய்களுக்கும் தேவையான ஆகக்குறைந்த அளவு 1.5 மீற்றர்கள் வீதமும் உள்ள வீதியின் மொத்த அகலம் 6.7 மீட்டர்களுக்கு குறையாமலும் உள்ள அத்துடன் வீதியின் பாலம், கடவுத்துறை மற்றும் ஏனைய திட்ட அமைப்புகளும் சிறந்த நிலையில் உள்ளதுமான -

(அ) ஏதேனும் வீதியொன்று ஆகக்குறைந்தது இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் செல்வதையும் பிரதான சந்திகள் இரண்டு அல்லது அதற்கு கூடுதலாக தொடர்புபடுகின்றதெனவும் இந்த வீதி தேசிய வீதியொன்றை இணைக்கும் வீதியொன்றெனவும்;

(ஆ) ஏதேனும் வீதியொன்றில் நாளொன்றில் வாகனப் போக்குவரத்தின் அளவு ஒருநாளைக்கு நூற்றுக்கும் இருநூற்று ஐம்பதுக்கும் இடைப்பட்ட வாகனங்கள் செல்லும் மாகாண வீதிகள் இரண்டினை இணைக்கின்றதெனவும்;

(இ) ஏதேனும் வீதியொன்று ஏனைய தேசிய அல்லது மாகாண வீதிகளுக்கு இணைப்பை வழங்கும் பிரதான ஆற்றின் முக்கிய இடங்களில் அமைக்கப்பட்ட பாலம் கடக்கும் முனைகளை கொண்டுள்ளதெனவும்;

(ஈ) குறித்த வீதி மாகாணத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஓரிடத்திற்கு அல்லது மாகாணத்தின் ஒரு விசேட கருத்திட்டத்திற்கு அணுகுகையை வழங்குகின்ற தெனவும்.

திருப்தியுறுமிடத்து, தற்போது குறித்த வீதி சொந்தமான நிறுவனத்தின் உடன்பாட்டின் மீது குறித்த வீதி அல்லது வீதிகள் மாகாண சபைக்கு கையளிக்கப்படலாம்.

## பாகம் II

### மதியுரைச் சபையைத் தாபித்தலும் அதன் பணிகளும்

*மாகாண வீதி அபிவிருத்தி மதியுரைச் சபையை தாபித்தலும் அதன் பணிகளும்.*

15. (1) இதனகத்துப் பின்னர், 'மதியுரைச் சபை' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மாகாண வீதி அபிவிருத்தி மதியுரைச் சபையொன்று தாபிக்கப்பட வேண்டுமென்பதோடு, இந்த மதியுரைச் சபை பின்வரும் உறுப்பினர்களையும் அவர்களினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட பிரதிநிதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) வடமேல் மாகாண சபையின் வீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் தலைவராக இருக்க வேண்டியதும் மாகாண சபையில் இந்த அமைச்சுக்காக மாகாணசபை தவிசாளரினால் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளதுமான 'மதியுரைக் குழுவினால்' பெயர் குறித்து நியமிக்கப்படும் இந்த குழுவின் மூன்று உறுப்பினர்கள்;

(ஆ) வடமேல் மாகாணத்தின் பிரதம செயலாளர்/ அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதியொருவர்;

(இ) குருநாகல், புத்தளம் மாவட்டச் செயலாளர்கள் அல்லது அவர்களினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதிகள்;

(ஈ) வடமேல் மாகாண சபையின் வீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்;

(உ) வடமேல் மாகாண சபையின் நிதி அலுவலகள் கையளிக்கப்பட்டுள்ள பிரதி பிரதம செயலாளர் / அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;

(ஊ) வடமேல் மாகாண சபையின் பொறியியல் பணிகள் கையளிக்கப்பட்டுள்ள பிரதி பிரதம செயலாளர் / அல்லது அவர்களினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;

(எ) வடமேல் மாகாண சபையின் திட்டமிடல் விடயம் கையளிக்கப்பட்டுள்ள பிரதி பிரதம செயலாளர் அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;

(ஏ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடமேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பணிப்பாளர் அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;

(ஐ) வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;

(ஒ) குருநாகல், புத்தளம் பிரதி பொலிஸ் மா அதிபர்கள் அல்லது அவர்களினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;

(ஓ) மதியுரைச் சபையின் செயலாளராக இருக்க வேண்டிய வடமேல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர்;

(ஔ) தீர்மானமொன்று எடுக்கும் போது தேவையென மாகாண பணிப்பாளரினால் தலைவருக்கு சிபாரிசு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அல்லது ஆட்கள்.

(2) தலைவரானவர் தலைமை வகிக்கவேண்டுமென்பதோடு, தலைவர் இல்லாத சந்தர்ப்பங்களில் தலைவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மதியுரைக் குழுவின் உறுப்பினர் ஒருவர் தலைவர் பதவிக்கான பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) இந்தச் சபையின் உறுப்பினர்களுக்கும் செயலாளருக்கும் பிரதம செயலாளரின் சிபாரிசின் மீது ஆளுநரினால் அங்கீகரிக்கப்படும் பங்குபற்றுவதற்கான படியொன்று செலுத்தப்படலாம்.

(4) மதியுரைச் சபையின் பணிகள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்.

(அ) சபைக்கு ஆற்றுப்படுத்தப்படும் வடமேல் மாகாணத்திலுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்தல், நவீனமயப்படுத்தல் அத்துடன் நடைமுறைப் பிரச்சினைகள் சம்பந்தமாக செயலாற்றுதல்;

(ஆ) வீதிகளை பயன்படுத்துபவர்களுக்கு வசதிகளை வழங்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படும் விசேட கருத்திட்டங்கள் சார்பில் மாகாணத்திற்குப் பொருத்தமான விதிகளை வகுத்தல்;

(இ) வீதி தொடர்பிலான ஆராய்ச்சிகள் மற்றும் வீதி அபிவிருத்தி தொழில்நுட்ப மேம்பாட்டு என்பன தொடர்பில் ஏற்புடைய நடவடிக்கைகளை தீர்மானித்தல்;

(ஈ) இலங்கையில் கூட்டிணைந்த நெடுஞ்சாலைகள் வீதி வலையமைப்பு மற்றும் அதனோடிணைந்த தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது மாகாண சபையினுள் உள்ள வீதி வலையமைப்பிற்குரிய வீதிகளை அரசாங்கத்திற்கு அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிப்பது சம்பந்தமாக தீர்மானித்தல்;

(உ) மாகாணத்திற்குள் அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்களினால் பராமரிக்கப்படும் ஏதேனும் வீதியொன்று இந்த நியதிச்சட்டத்தின் கீழ் மாகாணத் திணைக்களத்தினால் பராமரிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் உரிய உடைமையாக்கல் சம்பந்தமாக தீர்மானித்தல்.

குழு உறுப்பினர்களின் நியமனம்.

16. இந்த நியதிச்சட்டத்தின் 15(1) ஆம் பிரிவில் (அ) முதல் (ஐ) வரை பதவிவழியாக நியமிக்கப்படுவதோடு, (ஒ) வின் கீழ் உறுப்பினர்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் மேல் 15(1)(ஒ) பிரிவின் பிரகாரம் நியமிக்கப்படலாம்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

17. அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு (02) வருடங்களாகும்.

உறுப்புரிமை இல்லா தொழிதல்.

18. அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைதல், பதவியிலிருந்து இராஜினாமா செய்தல், அமைச்சரினால் அவருடைய தற்றுணிபின் பேரில் பதவியிலிருந்து விலக்குதல், இரண்டு (02) தொடர் கூட்டங்களுக்கு கலந்து கொள்ளாமை அல்லது உறுப்பினர் ஒருவரின் மரணம் அல்லது மனநலம் குன்றியதன் மீது உறுப்பாண்மை இல்லாதொழிவதோடு, குறித்த வெற்றிடம் அமைச்சரினால் நிரப்பப்படுதலும் வேண்டும்.

குழுக்கூட்டம்.

19. மதியுரைச் சபை ஆகக்குறைந்தது வருடத்துக்கு ஒரு தடவை வீதம் கூட்டப்படுதல் வேண்டும். தேவையாயின் தலைவரின் ஆலோசனையின் மீது செயலாளரினால் மேலதிக கூட்டமொன்று கூட்டப்படலாம்.

கூட்ட நடப்பெண்.

20. மதியுரைக் குழுவின் கூட்டநடப்பெண் உறுப்பினர்களுள் 1/3 ஆக இருத்தல் வேண்டும். உறுப்பினர்களிடையே வெற்றிடம் நிலவுதல், குழு கூட்டங்களை நடாத்துவதற்கோ அல்லது சட்டங்களில் தீர்மானம் எடுப்தற்கு பாதிப்பினை ஏற்படுத்தலாகாது.

## பாகம் III

### மாகாண சபை வீதிகள்

*மாகாண சபை வீதிகள்.*

21. (1) அமைச்சரினால் இந்த நியதிச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட வீதிகளும், இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்றின் போதும் கூட மாகாணசபை வீதிகளாக கருதி செயலாற்றிய முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ''சீ'', ''டீ'' என அழைக்கப்படும் வடமேல் மாகாணத்திற்குள் அமைந்துள்ள வீதிகளும் வடமேல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உரியதாதல் வேண்டும்.

(2) **விசேட வகுப்பீடுள்ள** -

(அ) ''சீ'' தர வீதி என்னும் போது தேசிய நெடுஞ்சாலையொன்றில் ஆரம்பித்து தேசிய நெடுஞ்சாலை யொன்றில் அல்லது மாகாணசபை வீதியொன்றில் முடிவுறும் சகல வீதிகளும்;

(ஆ) ''டீ'' தர வீதி என்னும் போது தேசிய நெடுஞ்சாலையொன்றில் ஆரம்பித்து தேசிய நெடுஞ்சாலை யொன்றல்லாத அல்லது மாகாண சபை வீதியொன்றல்லாத வீதியொன்றில் அல்லது இடமொன்றில் முடிவுறும் அத்துடன் மாகாண சபை வீதியொன்றில் ஆரம்பித்து தேசிய நெடுஞ்சாலையொன்றில் முடிவுறாத சகல வீதிகளும்

உள்ளடங்கும்.

(3) வடமேல் மாகாணசபை வீதிகளாக தற்போது கருதப்படுவது மேல் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகளாவதோடு, புதிதாக மாகாணசபைக்கு உடைமையாக்கிக் கொள்ளப்படும் அல்லது வேறு நிறுவனமொன்றுக்கு உடைமையாக்கப்படும் வீதிகள் தொடர்பிலான விபரங்கள் அமைச்சரினால் மாகாண சபையின் அங்கீகாரத்துடன் அரசாங்க வர்த்தமானியின் IV ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மாத்திரம் உடைமையாக்கிக் கொள்ள அல்லது கையளிக்கப்படல் வேண்டும்.

*நிருமாணிப்பு எல்லைகளும் வீதி ஒதுக்க எல்லைகளும்.*

22. (1) மேல் 21(3) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல் காரணமாக அல்லது அரசாங்க வர்த்தமானியின் IV ஆம் பகுதியில் பிரசுரிக்கப்படும் கட்டளைகள் மூலம் அல்லது அமைச்சரினால் மாகாண சபை வீதியொன்றின் அல்லது அதன் பகுதியொன்றின் ஊடாக நிருமாணிப்பு எல்லைகளை திட்டவட்டமாக குறிப்பிடுதல் வேண்டும்.

(2) மேல் (1) ஆம் உட்பிரிவின் கீழ் மாகாண சபை நிருமாணிப்பு எல்லைகள் திட்டவட்டமாக குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில் குறித்த வீதியின் நிருமாணிப்பு எல்லைகள் -

(அ) 'சீ' தர வீதியின் மோட்டார் வாகனங்கள் செல்லும் பகுதியின் நடுப்பகுதியிலிருந்து பத்து மீற்றர்களும்;

(ஆ) 'டீ' தர வீதியின் மோட்டார் வாகனங்கள் செல்லும் பகுதியின் நடுப்பகுதியிலிருந்து பத்து மீற்றர்களும்;

(இ) இதற்கு மேலதிகமாக ஏற்கனவே வீதித் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒதுக்கங்களும் ;

உள்வாங்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தியாவசியமானதென கருதப்படின் இயைபுள்ள உள்ளூராட்சி நிறுவனத்துடன் கலந்தாலோசித்து குறித்த வீதியின் ஒதுக்க எல்லைகளை நிருமாணிப்பு எல்லைகளை நகரத்திற்கு அண்மையிலும் சந்திகள் போன்ற இடங்களிலும் மாற்றலாம் என்பதோடு, இந்த எல்லைகள் அமைச்சரினால் காலத்திற்குக் காலம் அரசாங்க வர்த்தமானியில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

## பாகம் IV

### வீதிகளை நிருமாணித்தலும் காணி கொள்ளலும்

*புதிய வீதிகளை நிருமாணித் தல், அகலமாக் குதல், திசை மாற்றுதல்.*

23.(1) அமைச்சரானவர் பல்வேறுபட்ட தரப்புகளிலிருந்தும் கிடைக்கும் கோரிக்கைகள் தொடர்பில் மாகாணப் பணிப்பாளரின் சிபாரிசின் மீது -

(அ) புதிதாக மாகாண சபை வீதியொன்றை நிருமாணிப்பதற்கும் ; அல்லது

(ஆ) இப்போதுள்ள வீதியை காணி கொள்ளலுடன் அகலமாக்குவதற்கும் அல்லது விருத்தி செய்வதற்கும் ; அல்லது

(இ) ஏதேனும் வீதியொன்றின் திசைமாற்றத்திற்கும்;

அதிகாரமளிக்கலாம்.

(2) அமைச்சர் ஏதேனும் வீதியொன்றை புதிதாக நிருமாணிப்பதற்கு அல்லது அகலமாக்குவதற்கு அல்லது விருத்தி செய்வதற்கு அல்லது திசைமாற்றத்திற்கு அதிகாரமளிக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த வீதியின் ஒதுக்கீடுகள் மற்றும் நிருமாணிப்பு

எல்லைகள் உள்ளடங்கலாக அத்தகைய வீதிகளின் நீளத்தையும் அகலத்தையும் குறித்துரைத்து அளவை வரைபடம் ஒன்றை தயாரிக்குமாறு மாகாண பணிப்பாளருக்கு அதிகாரமளிக்கலாம்.

(3) அமைச்சர் வர்த்தமானியில் கட்டளை வெளியிடப்பட்டதன் மேல் விடயத்திற்கேற்ப மேல் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவை வரைபடத்தில் காட்டப்பட்ட காணி இடப்பரப்பை அல்லது அதன்கண்ணுள்ள ஏதேனும் அக்கறையை மாகாண சபை வீதியொன்றின் நிருமாணிப்பு எல்லை அல்லது ஒதுக்கமாக வெளிப்படுத்தலாம்.

ஒதுக்கிடம் ஒன்றினுள் அல்லது நிருமாணிப்பு எல்லைக்குள் அபிவிருத்தி வேலை களுக்கான தடை.

24. (1) வர்த்தமானியில் கட்டளை வெளியிடப்பட்டதன்மேல் நிருமாணிப்பு எல்லைக்குள்ளாக ஏதேனும் கட்டமைப்பைக் கட்டுதல் அல்லது மீளக்கட்டுதல் அல்லது மீளக் கட்டுதல் தடைசெய்யப்படுதல் தொடர்பான இந்த நியதிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காணி இடப்பரப்பிற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இந்த நியதிச்சட்டத்தின் இந்த பாகத்தின் கீழ் வீதி ஒதுக்கிடம் அல்லது நிருமாணிப்பு எல்லைகள் வெளிப்படுத்துவதன் மீது, மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் முன்னரான அங்கீகாரத்துடன் தவிர அத்தகைய ஒதுக்கிடமாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பினுள் ஏதேனும் அரசாங்க முகவராண்மையினால் அல்லது மாகாண சபையின் ஏதேனும் நிறுவனமொன்றினால் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் நிறைவேற்றப்படலாகாது அல்லது நிறைவேற்றப்படச் செய்வித்தலாகாது.

காணி கொள்ளல் சட்டத்தின் ஏற்புடைமை.

25.(1) விடயத்திற்கேற்ற ஏதேனும் காணி அல்லது காணியிலுள்ள ஏதேனும் அக்கறை வீதி ஒதுக்கிடமொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றவிடத்து -

(அ) அத்தகைய காணி அல்லது அதிலுள்ள அக்கறையானது (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளல் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பகிரங்க நோக்கமொன்றிக்கு தேவைப்படுத்தப்படுவதாக கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய காணி அல்லது அதிலுள்ள அக்கறையானது (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்காக அரசாங்கத்தினால் கொள்ளல் செய்யப்படலாம். அச்சந்தர்ப்தப்தில் காணி கொள்ளல் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளும் நடவடிக்கை முறைகளும் இனங்கியொழுகப்படுதலும் வேண்டும்.

உள்ளூராட்சி நிறுவன மொன்றுக்கு உரித்தாக்கப்பட்ட காணியை கொள்ளல் செய்தல்

26.(1) மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனமொன்றுக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் காணியானது அல்லது காணியிலுள்ள அக்கறையானது இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தேவைப்படுகின்றதென அமைச்சர் சான்றுப்படுத்துமிடத்து குறித்த அதிகார பிரதேசத்தின் உள்ளூராட்சி நிறுவனத்துடன் உசாவுதலைச் செய்து மாகாண சபையின் உள்ளூராட்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் விருப்பத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உரித்தாக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று அதில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான ஏதேனும் காணிக்கு அல்லது காணியின் அக்கறைக்கு மற்றும் அத்தகைய காணியிலுள்ள ஏதேனும் கட்டடங்கள் அல்லது கட்டமைப்புகளுக்கு எல்லா பாரபந்தங்களிலிருந்தும் சுதந்திரமானதும் முற்றானதுமான உரித்தை மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அளித்தல் வேண்டும். அத்தகைய காணி அல்லது அத்தகைய காணியின் அக்கறை அல்லது அதன் மீதான கட்டடங்கள் அல்லது வேறு கட்டமைப்புகள் தொடர்பிலான நட்டஈடானது திணைக்களத்தினால் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழான விசேட அளிப்புக்கள்.

27.(1) ஏதேனும் முடிக்குரிய காணி அல்லது அதன் பாகம் இந்த நியதிச்சட்டத்தின் இந்தப் பாகத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நோக்கங்களுக்காகத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கம் (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் விசேட அளிப்பு அல்லது குத்தகையொன்று வழங்கப்பட வேண்டிய நோக்கமொன்றாக கருதப்படுதல் வேண்டும்.

(2) இந்த நியதிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட தேதிக்கு உடனடுத்து நேர்முந்திய தேதியன்று திணைக்களத்தின் உடைமையிலுள்ள அல்லது திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அத்துடன் வர்த்தமானியில் வெளிப்படுத்தப்பட்ட கட்டளைகள் மூலம் அமைச்சரினால் ஆக்கப்பட்டு குறித்துரைக்கப்பட்டுள்ள சகல வீதிகளும் கட்டமைப்புகள் மீதான ஏதேனும் பாதை உரிமையும் அடங்கலாக எல்லாச் சொத்துக்களும் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்திற்கு கைமாற்றப்படுதலும் அத்துடன் உரித்தாக்கப்படுதலும் வேண்டும்.

மீளக் குடியமர்த் தலுக்கான காணிகளைக் கொள்ளல் செய்தல்.

28.(1) திணைக்களமானது, அமைச்சரின் அங்கீகாரத்துடனும் உரிமையாளர்களின் சம்மதத்துடனும் அளவை வரைபடத்திலும் இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டதுமான ஏதேனும் காணியை அல்லது அதிலுள்ள ஏதேனும் அக்கறையை கொள்ளல் செய்யலாம்.

(2) திணைக்களம், அமைச்சரின் அங்கீகாரத்துடன் இந்த நியதிச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளின் நிறைவேற்றுதல் காரணமாக இடம்பெயர்ந்த அல்லது பாதிக்கப்பட்ட ஆட்களின் மீளக் குடியமர்த்தலுக்காக தேவைப்படும் ஏதேனும் காணியைக் கொள்ளல் செய்யலாம்.

29.(1) ஏதேனும் காணியொன்றின் அல்லது அதிலுள்ள ஏதேனும் அக்கறையை கொள்ளல் செய்வதற்காகவும் நட்டஈடு செலுத்துவதற்காகவும் பின்வருவோரைக் கொண்டிருக்கின்ற குழுவொன்றினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்: கொள்ளல் அல்லது நட்டஈட்டுக் குழு.

(அ) நட்டஈட்டுக் குழுவின் தலைவராக மாகாணத்தின் பிரதான செயலாளர் / அல்லது அவரது பிரதிநிதி ;
(ஆ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான மாகாண சபையின்பிரதி பிரதம செயலாளர் ;
(இ) மாகாண காணி ஆணையாளர் ;
(ஈ) வீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான மாகாண அமைச்சின் செயலாளர் ;
(உ) நட்டஈட்டுக் குழுவின் செயலாளராக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர்;
(ஊ) குழுவுக்குத் தேவையெனக் கருதும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மாகாண வீதிப் பணிப்பாளரின் சிபாரிசின் மீது பிரதான செயலாளரினால் நியமிக்கப்படும் விசேட பிரதிநிதியொருவர்.

(2) குழுவின் கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாவர்.

(3) இயைபுள்ள கொள்ளலின் போது அல்லது நட்டஈடு செலுத்தும் போது இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் மாகாணத்திலுள்ள மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையொன்றினை பெற்றுக் கொள்தல் வேண்டும்.

30.(1) வீதியொன்றை பராமரிக்கும் அல்லது பகிரங்க பணியொன்றுக்காக மாகாணப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக திணைக்களததினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் காணியை அல்லது அதிலுள்ள ஏதேனும் அக்கறையை 90 நாட்களுக்கு கூடாத காலப்பகுதிக்கு தற்காலிகமாக பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படலாம். தற்காலிகமாக காணியை பயன்படுத்து வதற்கு இடமளிப் பதற்கு திணைக்க ளத்துக்குள்ள தத்துவம்.

(2) பகிரங்க நோக்கமொன்று சம்பந்தமாக மேலும் கால நீடிப்பொன்று தேவைப்படுமாயின் அவ்வாறு காலத்தை நீடிப்பதற்கு மாகாணப் பணிப்பாளருக்கு இயலும்.

## பாகம் V

### வேலைகளை நிறைவேற்றுதல்

31. இந்த நியதிச்சட்டத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட வேண்டிய சகல வேலைகளினதும் பணிப்பும் கட்டுப்பாடும் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். இந்த அதிகாரம் விடயத்திற்கேற்ப ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் கையளிக்கப்படலாம். வேலைகளின் பணிப்பும் கட்டுப்பாடும் மாகாணப் பணிப்பாளருக்கு உரித்தாக்கப் படுதல்.

32. (1) அமைச்சர், மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளரின் அங்கீகாரத்தின் மீது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் மாகாணசபை வீதியொன்றின் - வீதியொன்றின் தற்காலிக மூடுகைக்கு அமைச்சர் கட்டளையிடலாம்.

(அ) தற்காலிகமாக மூடுகையை ; அல்லது
(ஆ) உளதாயிருக்கின்ற பகுதியொன்றுக்குப் பதிலாக மாற்று பாதையொன்றுக்கான அல்லது வீதியொன்றின் மாற்றுப் பகுதியொன்றுக்கான பதிலீட்டை; செய்யலாம்.

(2) இச் சந்தர்ப்பத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளரினால் உரிய நிறுவனத்துக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் வீதியொன்றை நிரந்தரமாக மூடும் போது பிரசித்த அறிவித்தலுக்கு மேலதிகமாக வர்த்தமானி அறிவித்தலிலும் இந்த அறிவித்தலானது வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழான கட்டளையை நிறைவேற்றுகையில் அத்தகைய நோக்கத்திற்காக ஏதேனும் காணியை கொள்ளல் செய்தல் அவசியமாக வருமிடத்து, அத்தகைய காணியானது பகிரங்க நோக்கமொன்றிற்கு தேவைப் படுத்தப்பட்டதாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இந்த நியதிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் குறித்த கொள்ளல் சம்பந்தமாக ஏற்புடையனவாதலும் வேண்டும்.

திணைக்களத்தின் அனுமதியின்றி வீதியொன்றில் சேவைகள் எவையும் மேற்கொள்ளப் படுதலாகாது.

33.(1) ஆளெவரும் அல்லது அரசாங்க திணைக்களம், மாகாண சபையின் நிறுவனம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது வேறு நிறுவனம் எதுவும் ஏதேனும் எரிவாயு, நீர், மின்சாரம், தொலைத்தொடர்பு அல்லது வேறு ஏதேனும் சேவைக்கு, விடயத்திற்கேற்ப மாகாண பணிப்பாளரின் பிரதிப் பணிப்பாளரின் அல்லது நிறைவேற்று பொறியியலாளரின் எழுத்திலான முன் அங்கீகாரமின்றி, வீதியொன்றை அல்லது வீதிக்கு குறுக்காக அல்லது வீதி ஒதுக்கிடத்தை பயன்படுத்தலாகாது.

(2) இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் சேவைகளுக்கு வீதி ஒத்துக்கிடமொன்றை பயன்படுத்துவதற்காக மாகாணப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன்இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆள் ஒருவரிடமிருந்து வாடகையொன்றை அறவிடலாம்.அறவிடப்படும் கட்டணம் நிறைவேற்று பொறியியலாளரினால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) விடயத்திற்கேற்ப மாகாணப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் அல்லது நிறைவேற்று பொறியியலாளர் அதன் சார்பான ஏதேனும் விசேட சட்டவாக்கத்திற்கமைவாகஎரி வாயு, நீர், மின்சாரம், தொலைத்தொடர்பு அல்லது வேறு ஏதேனும் சேவையொன்றை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக ஏதேனும் வீதியொன்று அல்லது வீதி ஒதுக்கிடம் எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் அரசாங்க திணைக்களத்தினால் அல்லது மாகாண சபையின் ஏதேனும் நிறுவனமொன்றினால் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்தினால் பயன்படுத்துவதற்குமென அத்தகைய ஆளுடன் அல்லது அரசாங்க திணைக்களத்துடன் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்துடன் அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்துடன் திணைக்களத்தின் சார்பில் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளலாம்.

(4) வீதியொன்றை விசாலிக்கும், மேம்படுத்தும் அல்லது திசைதிருப்பும் பட்சத்தில் விடயத்திற்கேற்ப மாகாணப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் அல்லது நிறைவேற்று பொறியியலாளர் எவரேனும் ஆளை அத்தகைய ஆளினால் நிறைவேற்றப்பட்ட அல்லது இடப்பட்ட உருப்படியான ஏதேனும் கட்டமைப்பை அல்லது குழாய் இணைப்பை அறிவித்தல் மூலம் அதததகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அந்த ஆளின் சொந்த செலவில் அகற்றுமாறு தேவைப்படுத்தலாம்.

(5) நிறைவேற்றுப் பொறியியலாளர் இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் எதிர்ப்புத் தெரிவிப்பின் காரணமாக அத்தகைய தடையை அப்புறப்படுத்த இயலாதவராக அல்லது விரும்பாதவராக இருக்குமிடத்து அல்லது ஏதேனும் தடையை விளைவிப்பதற்கு பொறுப்பாயிருந்த ஆளைக் கண்டுபிடிக்க இயலாவிடில் நிறைவேற்றுப் பொறியியலாளர் நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றத்திற்கு அதன் பொருட்டு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம் .

(6) நீதிவான் விடயத்தின் நிகழ்வுகளைக் கருத்திற் கொண்டதன் பின்னர், அத்தகைய தடையை உடனடியாக அகற்றுமாறு பிசுக்கால் அலுவலரைப் பணிக்கலாம்.

பகிரங்க சேவை அல்லது தனியார் தொழில்முயற்சி எதுவும் அதிகாரமின்றி வீதியொன்றை பயன்பாட்டிற்கு எடுத்தலாகாது.

34 (1) ஆளெவரும் 33 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் நியதி அல்லது நிபந்தனைகளின் கீழும் அவற்றிற்கிணங்கவும் தவிர ஏதேனும் பகிரங்க சேவையின் அல்லது தனியார் தொழில்முயற்சியின் நோக்கத்திற்கு வீதியொன்றை பயன்பாட்டிற்கு எடுத்தலோ அல்லது அதன் மீது ஏதேனும் நிருமாணிப்பொன்றை நிறைவேற்றுதலோ அல்லது பொறியொன்றின் நிறுவுகையையோ அல்லது பேணுகையையோ செய்தலாகாது.

(2) ஆயினும், அத்தகைய உடன்படிக்கையைப் பின்பற்றி ஏதேனும் வீதியின் அகழ்வு அல்லது வெட்டுதல் எதனையும் தொடங்குவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் அத்தகைய அகழ்வின் அல்லது வெட்டுதலின் பின்னர் நிறைவேற்று பொறியியலாளரால் மதிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய வீதியின் புனரமைப்பு அல்லது பழுதுபார்த்தல் செலவு மற்றும் மாகாணப் பணிப்பாளரினால் விதித்துரைக்கப்பட்டவாறான மீளளிக்கப்படற்பாலதான மேலதிக வைப்பொன்றும் திணைக்களத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும். இந்தத் தொகை வீதியை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்காக பயன்படுத்துதலும் வேண்டும்.

(3) அதேபோன்று மேலும் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகைக்கு அப்பால் திணைக்களத்தினால் மேலதிக செலவு எதுவும் உறப்படின், அத்தகைய தொகை திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட மீளளிக்கப்படற்பாலதான மேலதிக வைப்பிலிருந்து கழிக்கவேண்டுமென்பதுடன், எஞ்சியிருக்கும் மீதித்தொகை அதன் பின்னர் மீளளிக்கப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது அதனுடன் இணங்கியொழுக தவறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரினால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் சேதம் சார்பில் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டிலுள்ள செலவினை அறவிட்டுக் கொள்வதற்கும் ஒரு லட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்கும் ஆளாதலும் வேண்டும்.

நிறைவேற்று பொறியியலாளர் தடைகளை அப்புறப் படுத்தலாம்.

35 (1) 33 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையில் அடங்கியுள்ள அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எவ்வாறிருப்பினும், 33 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கையை பின்பற்றி செயல்படும் போது ஏதேனும் வீதிக்கு ஏதேனும் தடையை ஏற்படுத்திய அல்லது ஏதேனும் வீதி ஒன்றிற்கான விசாலிப்பை அல்லது மேலதிக விருத்தியை அல்லது திசைமாற்றத்தை தடை செய்யும் எவரேனும் ஆள் ஒருவருக்கு அத்தகைய தடையை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் நிறைவேற்றுப் பொறியியலாளர் அறிவித்தல் வழங்குதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) அத்தகைய ஆள் அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகை தடையை அப்புறப்படுத்த அல்லது அத்தகைய உருப்படியான கட்டமைப்பை அல்லது குழாய் இணைப்பை அப்புறப்படுத்த அல்லது நகர்த்த தவறுமிடத்து அல்லது அசட்டை செய்யுமிடத்து அத்தகைய தடையை அப்புறப்படுத்துவதும் அல்லது தணிப்பது அல்லது அத்தகைய உருப்படியான கட்டமைப்பை அல்லது குழாய் இணைப்பை அப்புறப்படுத்துவதும் அத்துடன் அது தொடர்பில் உறப்பட்ட செலவுகளை அறவிடுவதும் நிறைவேற்று பொறியியலாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) மேல் (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தடையை அப்புறப்படுத்த 33(6) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குத் தவறுமிடத்து அந்த தடையை ஏற்படுத்தும் ஆள் இது தொடர்பில் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவரினால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கும் இந்த தடையை அப்புறப்படுத்துவதற்காக உறப்பட்ட செலவினை அறவிட்டுக் கொள்வதற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) விடயத்திற்கேற்ப அத்தகைய அப்புறப்படுத்துதலின் அல்லது தணித்தலின் அல்லது நகர்த்தலின் விளைவாக ஏற்படும் அத்தகைய உடன்படிக்கையின் மீறுகை எதற்காகவும் அத்தகைய ஆளுக்கு நட்டஈடு எதுவும் செலுத்தப்படற் பாலதாதலாகாது.

*வீதிகளை அகழ்தல், நில அளவை செய்தல் முதலியவற்றிற்கு ஒருசில ஆட்களுக்கு தத்துவமளிக்கப்படுதல்.*

36 (1) மாகாண பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அவருடைய நோக்கம் பற்றி அதன் இருப்பாட்சியாளருக்கு அறிவிப்பதன் மீது, நியாயமான எல்லா நேரங்களிலும் அவசியமான எல்லா வாகனங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் தேவையான பொருட்கள் என்பவற்றுடன் ஏதேனும் உளதான அல்லது உத்தேசிக்கப்பட்ட வீதியை, அடுத்துள்ள ஏதேனும் காணியினுள் அல்லது புதிய வீதி ஒதுக்கிடமொன்றாக வருங்காலத்தில் வெளிப்படுத்தப்படவுள்ள ஏதேனும் காணியில் பிரவேசிக்கலாம் என்பதுடன் -

(அ) அதன் மீது நில அளவை செய்யும் அளக்கும், சுவடி எடுக்கும், வேலை செய்யும், திறக்கும், மாற்றும், திருப்பும், பழுதுபார்க்கும், துப்பரவாக்கும், சீராக்கம் செய்யும் அல்லது வேலி அடைக்கும்;

(ஆ) ஏதேனும் பாலத்தை, பாலவழியை, மண்ணை பிடித்து வைக்கும் கட்டமைப்பை, மதகை, வடிகாலை, வேலியை அல்லது அகழியை அதன்மீது நிருமாணிக்கும், அகழும், பழுதுபார்க்கும், துப்பரவுசெய்யும், அல்லது சீராக்கம் செய்யும் ;

(இ) அத்தகைய அலுவலரினதும் அவரது வேலையாட்களினதும் பயன்பாட்டிற்கென எவையேனும் தற்காலிக கட்டடங்களை நிறுவும் அல்லதுஅத்தகைய அலுவலர் அல்லது அவரது வேலையாட்களின் பயன்பாட்டிற்கெனஏதேனும் கட்டடத்தை பழுதுபார்க்கும்;

போன்ற நோக்கங்களுக்குத் தேவையான எல்லா செயல்களையும் விடயங்களையும் புரியலாம்.

(2) மாகாணப் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அவருடைய நோக்கம் பற்றி அதன் இருப்பாட்சியாளருக்கு அறிவிப்பதன் மீது, நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் ஏதேனும் உளதான அல்லது உத்தேசிக்கப்பட்ட வீதிக்கு, அடுத்துள்ள காணிக்கு மேல் (1) ஆம் உட்பிரிவின் (அ) முதல் (இ) வரையிலுள்ள நோக்கத்திற்காக அத்தகைய காணியினுள் பிரவேசித்து ஏதேனும் உளதான அல்லது உத்தேசிக்கப்பட்ட வீதியை, அடுத்துள்ள காணியில் தண்ணீருக்காக, வெட்டு மரத்திற்காக, தூறுகளுக்காக, கற்களுக்காக, சரளைக்கல்லுக்காக, மணலுக்காக, அல்லது வேறு பொருட்களுக்காக தேடுகை செய்யலாம், தோண்டலாம், வெட்டலாம், என்பதுடன் அங்கிருந்து அவற்றை எடுத்துக் கொண்டும் செல்லலாம்.

*வீதியின் அருகிலுள்ள காணியொன்றுக்கு பிரவேசிப்பதற்கான உரிமை.*

37(1) வீதியொன்றுக்கு அவசர பழுதுபார்த்தல்களை பயனுறுத்துவதற்கான அவசியம் எழுகின்ற பட்சத்தில் அத்தகைய நோக்கத்திற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் பொருளை அத்தகைய வீதிக்கு, அருகாமையிலுள்ள ஏதேனும் காணியிலிருந்து எடுத்துச் செல்வது மாகாணப் பணிப்பாளரினால் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளர்களுக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு மாகாணப் பணிப்பாளரினால் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர் அத்துமீறி பிரவேசிப்பவர் ஒருவராக கருதப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாகாணப் பணிப்பாளரினால் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளர் அல்லது இந்த நோக்கம் கையளிக்கப்பட்டுள்ள ஆள் ஒருவர் ஏதேனும் பொருளை அடுத்துள்ள ஏதேனும் வேறு காணியிலிருந்து வசதியாக பெற்றுக் கொள்ள முடியுமாயின் அத்தகைய பொருளை ஏதேனும் வேறு காணியிலிருந்து பெறுதலாகாது.

(4) திணைக்களம் எந்தக் காணியிலிருந்து ஏதேனும் பொருள் அகற்றப்பட்டுள்ளதோ அந்தக் காணியின் சொந்தக்காரருக்கு அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட பொருளுக்கும் அதனைப் பெறுகையிலும் ஏற்றிச் செல்கையிலும் ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் சேதத்திற்காக நியாயமான நட்டஈட்டைச் செலுத்துதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாகாணப் பணிப்பாளரினால் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளர் அல்லது இந்த நோக்கம் கையளிக்கப்பட்டுள்ள ஆள் ஒருவர் எந்தக் கிடங்குகளிலிருந்து அல்லது கற்குழிகளிலிருந்து எவையேனும் அத்தகைய பொருட்கள் அகற்றப்பட்டனவோ அந்தக் கிடங்குகளையும் கற்குழிகளையும் சுற்றி வேலி அடைப்பதற்கும் வழிமறிப்பதற்கும் எல்லா பாதுகாப்பு வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

வீதியொன்றை நிருமாணிப்பதற்காக காணியொன்றில் தற்காலிக கட்டடங்களை நிறுவுதல்.

38. (1) மேல் 37 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் நோக்கமொன்றை புரிகையில் அத்தகைய அலுவலர்களினதும் வேலையாட்களினதும் இருப்பிட வசதிக்காக அல்லது பொறித்தொகுதியினதும் உபகரணங்களினதும் களைஞ்சியப்படுத்துகைக்காக மாகாணப் பணிப்பாளரால் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் அல்லது இந்த நோக்கம் கையளிக்கப்பட்ட அத்தகைய ஆட்கள் அதனை அடுத்துள்ள ஏதேனும் காணியில் தற்காலிக கட்டடங்களை ஆக்குதலும் நிறுவுதலும் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) கட்டடமொன்றை நிருமாணிக்கும் நோக்கத்திற்காக தரிசு நிலம் அல்லது அரச காணிக்கு அல்லது மாகாணசபை அல்லது உள்ளூராட்சி அதிகாரசபை காணிக்கு அருகாமையில் இருப்பின் ஓராம் உட்பிரிவின் கீழான ஏற்பாடுகளின் மீது அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் அல்லது இந்த நோக்கம் கையளிக்கப்பட்ட அத்தகைய ஆட்கள் அதனை அடுத்துள்ள ஏதேனும் காணியில் தற்காலிக கட்டடங்களை ஆக்குதலும் நிறுவுதலும் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) திணைக்களம், அத்தகைய காணியின் பயன்பாட்டிற்காகவும் அதற்கு ஏற்படுத்தப்பட்ட எவையேனும் சேதங்களுக்காகவும் அத்தகைய காணியின் சொந்தக்காரருக்கு நியாயமான நட்டஈட்டைச் செலுத்துதல் வேண்டும்.

இடிமானமும் கழிவும் அடுத்துள்ள காணியில் கையுதிர்க்கப்படுதல்.

39. (1) புதிய வீதி, வீதி விசாலிப்பு அல்லது அபிவிருத்தி, பாலம், பால வழி, மதகு அல்லது மண்ணைப் பிடித்து வைக்கும் கட்டுமானம் ஒன்றின் பேணலுடன் பழுதுபார்த்தலுடன் அல்லது நிருமாணத்துடன் தொடர்புபட்ட வேலை நடைபெறும் பொழுது அல்லது ஏதேனும் மண்சரிவை அகற்றும் பொழுது ஏதேனும் இடிமானத்தை அல்லது கழிவை அகற்றும் பொழுது மாகாணப் பணிப்பாளரினால் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அல்லது இந்த நோக்கம் கையளிக்கப்பட்ட ஆள் ஒருவருக்கு கற்கள், சரளைக் கற்கள் அல்லது அப்புறப்படுத்தப்படும் பொருட்களை அதனை அடுத்துள்ள ஏதேனும் காணியில் கொட்டுவதன் மூலம் அதனை கையுதிர்ப்பது சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் நோக்கமொன்றை புரிகையில் அத்தகைய காணியின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு அநாவசியமான சிரமத்தை தவிர்ப்பதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

தற்காலிக வீதிகளின் நிருமாணம்.

40. (1) பழுதுபார்த்தலுக்காக, புனரமைப்பிற்காக, புனர்நிருமாணத்திற்காக பாலம், பால வழி, மதகு அல்லது மண்ணைத் தடுத்துவைக்கும் கட்டுமானமொன்று மூடப்பட்டிருக்கும் ஏதேனும் காலப்பகுதியில் மாகாணப் பணிப்பாளரினால் அல்லது நிறைவேற்று பொறியியலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அல்லது இந்த நோக்கம் கையளிக்கப்பட்ட ஆள் ஒருவருக்கு அடுத்துள்ள காணியொன்றின் ஊடாக வாகனப் போக்குவரத்தை திசைதிருப்புவதற்காக தற்காலிக வீதியொன்றை அமைத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஆயினும், தற்காலிக வீதியொன்றை நிருமாணிக்கும் போது கட்டடம் தரைமட்டம் ஆக்கப்படுவதை அல்லது அத்தகைய சிறந்த முறையிலுள்ள தோட்டம் ஒன்றை அல்லது முனைவிடமொன்றை முறைகேடாக உடைமையாக்கப்படுவதற்காக தேவைப்படுத்தப்படலாகாது.

வீதியின் நிருமாணத்திற்கு வசதியளிப்பதற்கென மரங்களை வெட்டுதல் கிளைகளைத் தறித்தல் முதலியன.

41. வீதியொன்றுக்கு சேதம் விளைவிக்கின்றவையும் அல்லது வாகனங்களின் போக்குவரத்துக்கு, தெரு ஒளியேற்றலுக்கு, தோற்றப் பார்வைக்கு, வீதி சொத்துக்களுக்கு தடை ஏற்படுத்துகின்றவையுமான எல்லா மரங்களையும் கிளைகளையும், புதர்களையும், இலைகளையும் அல்லது வேர்களையும் வெட்டுவதும் அப்புறப்படுத்துவதும் அவசியமான வேலையாட்களுடனும் கருவிகளுடனும் உபகரணங்களுடனும் ஏதேனும் காணியினுள் அல்லது எவையேனும் வளவுகளினுள் பிரவேசிப்பது மாகாணப் பணிப்பாளர் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அல்லது இந்த நோக்கம் கையளிக்கப்பட்ட ஆள் ஒருவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

வீதியின் நெடுகிலும் வேலிகள் முதலியவற்றை நிறுவுதல்.

42. ஏதேனும் வீதியின் நெடுகிலும் வேலிகளை, தடைகளை, அகழிகளை, வடிகால்களை அல்லது கரையை அமைத்தல் மாகாணப் பணிப்பாளர் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அல்லது இந்த நோக்கம் கையளிக்கப்பட்ட ஆள் ஒருவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

43. எல்லா அகழிகளையும், வடிகால்களையும், மதகுகளையும், பாலத்தின் இடைவெளிகளையும், நீர்கால்வாய்களையும் செய்வதற்கும் துப்பரவு செய்வதற்கும் திறந்து வைப்பதற்குமான தத்துவத்தை மாகாணப் பணிப்பாளர் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் கொண்டிருத்தல் வேண்டும். அடுத்துள்ள எவையேனும் காணிகளின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் எவரும் மேற்சொல்லப்பட்ட செயல்களுடன் தலையிடுகின்ற அல்லது சேதப்படுத்துகின்ற ஏதேனும் செயலை அல்லது விடயத்தை செய்தலாகாது. வடிகால் முதலியவற்றைத் திறந்து வைத்தல்.

44. (1) இந்த நியதிச்சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கையில் அப்பிரயோகத்தின் விளைவொன்றாக எந்த ஆளுக்கு நட்டம் அல்லது சேதம் ஏற்படுகின்றதோ அந்த எவரேனும் ஆள் அதற்கான நட்டஈடு பெறுவதற்கு உரித்துடைய வராதல் வேண்டும். ஆதனத்திற்கான சேதத்திற்கு நட்டஈடு வழங்குதல்.

(2) அத்தகைய ஆளொருவர் சார்த்துரைக்கப்பட்ட சேதம் எடுத்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) மாதங்களைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்குள் மாகாணப் பணிப்பாளருக்கு நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு கோரிக்கையொன்றைச் செய்தல் வேண்டும். இக்காலப்பகுதிக்கு பின்னர் செய்யப்படும் விண்ணப்பம் கவனத்திற்கு எடுக்கப்படலாகாது.

## பாகம் VI

### வீதிகளின் பாதுகாப்பு

45. (1) மாகாண சபை வீதியொன்றுக்கு அருகாமையில் அல்லது அடுத்துள்ள காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர் வீதியின் பாதுகாப்பு சுவருக்கு அல்லது கால்வாய்க்கு அல்லது வீதி ஒதுக்கத்திற்கு அல்லது வீதிக்கு தடையினை அல்லது இடைஞ்சலை அல்லது சேதத்தை ஏற்படுத்தாது வீதியில் நுழைவதற்கு அல்லது வெளியேறுவதற்கு இடமுள்ளது. வீதியொன்றுக்கு அருகாமையிலுள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு குறித்த வீதியில் நுழைதல்.

(2) ஆயினும், வீதியொன்றுக்கு எந்த வகையிலேனும் உரிமை கோருவதற்கு இடமளித்தலாகாது.

46.(1) 22 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகளுக்கான எல்லைகளுக்குள் மாகாணப் பணிப்பாளரின் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரின் முன் அங்கீகாரமின்றி, ஆளெவரும் அத்தகைய வீதியின் நெடுகில் கட்டடமொன்றை நிருமாணித்தலோ அல்லது ஏதேனும் மதிலொன்றை, வேலியொன்றை நிருமாணித்தலோ அல்லது அத்தகைய கட்டடமொன்றை, மதிலொன்றை அல்லது வேலியொன்றை புதுப்பிப்பித்தலோ அல்லது தற்காலிக வேலியொன்றை நிருமாணித்தலோ அல்லது அடைப்பொன்றை வைத்தலோ ஆகாது. அனுமதியின்றி வீதிக்குரிய எல்லைக்குள் நிருமாணிப்புகளைச் செய்ய முடியாதென.

(2) ஆளெவரும் ஓராம் உட்பிரிவின் கீழ் முன் அறிவித்தல் கொடுக்கத் தவறுமிடத்து நிறைவேற்றுப் பொறியியலாளரின் அங்கீகாரத்துடன் ஏதேனும் அத்தகைய கட்டடத்தை இடிக்கச் செய்வித்தல் அல்லது ஏதேனும் அத்தகைய வேலியை, சுவரை அல்லது நிறுவுகையை கழற்றுவித்தலும் அப்புறப்படுத்துதலும் அத்துடன் அத்தகைய அகற்றுதலுக்கான செலவை அத்தகைய ஆளிடமிருந்து அறவிடுவதும் நிறைவேற்றுப் பொறியியலாளருக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(3) ஆயினும், விடயத்திற்கேற்ப அத்தகைய இடித்தலை அல்லது அப்புறப்படுத்தலை பற்றி சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு ஏதேனும் அத்தகைய இடித்தல் அல்லது அப்புறப்படுத்துதல் பற்றி போதிய அறிவித்தல் நிறைவேற்று பொறியியலாளரினால் செய்யப்படுதல் வேண்டும்.

47.(1) பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய தற்காலிக இயல்பானதான அலங்காரங்களை நிறுவுவதற்கான உரிமை உட்பட, அவரது வீட்டை அல்லது கட்டிடத்தை இடித்தலை, அதற்குப் பழுதுபார்த்தலை அல்லது நிருமாணப் பணியை மேற்கொள்வதற்காக, கட்டணமொன்றின் கொடுப்பனவின் மீது வீதி யொன்றின் ஏதேனும் பாகத்தை தற்காலிகமாக பயன்படுத்துவதற்கும் தற்காலிக வேலி அல்லது அடைப்பொன்றை நிறுவுவதற்கும் எவரேனும் ஆளை அனுமதிப்பது நிறைவேற்றுப் பொறியியலாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். தற்காலிக அடைப்புகளை நிறுவுவதற்கு அனுமதி பெறல்.

(அ) எந்த ஆளுக்கு அனுமதி வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் இரவு நேரங்களில் அத்தகைய தற்காலிக அடைப்பு அல்லது நிறுவுகை எவ்வளவு காலத்திற்கு நீடிக்கின்றதோ அவ்வளவு காலத்திற்கு வளவுகளில் போதியளவு ஒளியுள்ள விளக்கொன்றை வைத்திருத்தல் வேண்டும் அத்துடன்

(ஆ) வாகனங்களின் அல்லது பாதசாரிகளின் தடங்களில்லாத நடமாட்டத்திற்கு வீதியில் போதிய இடமிருக்கச் செய்தல் வேண்டும்.

(2) 34 ஆம் பிரிவில் அல்லது 35 ஆம் பிரிவின் ஓராம் உட்பிரிவிலுள்ள ஏற்பாடுகளில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவசரமானதும் முன் அங்கீகாரம் பெறுவதற்கு போதுமான கால அவகாசம் இல்லாததும் தாமதப்படுத்துதல் பொதுநலனுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விடயங்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப பொதுமக்களுக்கான ஏதேனும்

சேவையின் விநியோகத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர் ஒருவர் குறித்த வீதியின் அத்தகைய பகுதியொன்றை தற்காலிகமாக பயன்படுத்த முடியும்.

(3) ஆயினும், 2 ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் நடவடிக்கையொன்று பற்றி மாகாணப் பணிப்பாளருக்கு அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு தாமதமின்றி அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென்பதோடு, குறித்த சேவையை வழங்கும் போது வீதிக்கு அல்லது வீதி ஒதுக்கத்திற்கு அல்லது கால்வாய்க்கு அல்லது வீதியின் ஒரு பகுதிக்கு ஏற்பட்டுள்ள சேதம் சீர்செய்யப்படுவதற்காக நிறைவேற்றுப் பொறியியலாளரினால் மதிப்பிடப்படும் மதிப்பீட்டுத் தொகையை குறித்த சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த நிறுவனத்தினால் மாகாணத் திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

(4) வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும் இந்தப் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முன் அங்கீகாரம் பெற்றிருந்தாலன்றி, ஏதேனும் அத்தகைய நிருமாணிப்பொன்றுக்கு உரிமப்பத்திரமொன்று அல்லது அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படலாகாது.

*வீதி எல்லைகளுக்குள் தரைக்கடியிலான நிறுவுகைகள் செய்யப்படலாகாதென.*

48. (1) இந்த நியதிச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட நிருமாணிப்பு எல்லைகளுக்குள் ஏதேனும் கட்டடத்தை, நுழைவாயிலை அல்லது வேறு ஏதேனும் நிறுவுகையை நிறுவுதலோ அல்லது அத்தகைய கட்டடத்திற்கு ஏதேனும் சேர்த்தலைச் செய்தலோ அல்லது மீள நிறுவுதலோ, நினைவுப் பலகையொன்றையோ, சிலையொன்றையோ அல்லது அத்தகைய வேறு ஒரு நிறுவுகையையோ அல்லது ஒரு அடித்தளத்தை அல்லது தரைக்கடியிலான வேறு நிறுவுகையை நிருமாணித்தலோ அல்லது கிணறொன்றை, குட்டையை தோண்டுதலோ ஏதேனும் குழாய்களைப் பதித்தலோ ஆகாது.

(2) வீதி நிருமாணிப்பு எல்லைகளுக்கு அப்பால் எல்லை வேலியொன்றை மதிலொன்றை நிருமாணித்தலானது அத்தகைய ஏதேனும் நிறுவுகைக்கு தடையாக இருத்தலாகாது.

(3)வீதியின் அகலத்தையும் போக்குவரத்துக்குள்ள தோற்றத் தெளிவையும், அதன் விஸ்தீரணத்தையும், வீதியானது தகுந்த பராமரிப்பையும் கருத்திற் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில் திட்டவட்டமாக குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வீதியின் அளவினை விஞ்சுதலாகாதென்னும் நிபந்தனை மற்றும் பிற பொருத்தமான நிபந்தனைகள் என்பவற்றின் மீது வீதி அபிவிருத்திக் கூட்டிணைப்பு குழுவின் சிபாரிசுடன் மாத்திரம் மிக விசேடமான சந்தர்ப்பங்களில் வீதி ஒதுக்கத்திற்குள் ஏதேனும் மத ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்த நிறுவுகையொன்றுக்கு மாகாணப் பணிப்பாளரினால் அங்கீகாரம் வழங்கப்படலாம்.

*சட்டட வரையறைகளை திரிபுபடுத்தல் அல்லது விசாலித்தல்.*

49. அமைச்சர் மாகாணப் பணிப்பாளரின் விதப்புரையின் மீது அரசாங்க வர்த்தமானியின் IV ஆம் பகுதியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் ஏதேனும் வீதியொன்றின் அல்லது ஒரு வீதியின் பாகம் தொடர்பில் கட்டட வரையறையை திரிபுபடுத்தலாம் அல்லது விசாலிக்கலாம்.

*48 ஆம் பிரிவிற்கு முரணான கட்டுமானங்களின் நிறுவுகையின் விடயத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.*

50. (1) ஆளெவரும் 48 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணான ஏதேனும் கட்டுமாணத்தை நிறுவுவாராயின் அல்லது உள்ளதான கட்டுமாணம் ஒன்றிற்குச் சேர்த்தல் எதனையும் செய்வாராயின் நிறைவேற்றுப் பொறியியலாளர் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்தல் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்கு குறையான திகதியொன்றாகிய அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய கட்டமைப்பை அல்லது அதற்கான ஏதேனும் சேர்த்தலை இடித்தழிக்குமாறு அல்லது அப்புறப்படுத்துமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அல்லது அதன் பொருட்டு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது நிறைவேற்றுப் பொறியியலாளரால் அளிக்கப்படக் கூடிய அத்தயை நீடிக்கப்பட்ட காலத்திற்குள் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் ஓராம் உட்பிரிவின் கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தலொன்று வழங்கப்பட்டதோ அந்த ஆளின் கடமையாதல் வேண்டும்.

(3) (அ) ஓராம் உட்பிரவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றைப் பின்பற்றி செயற்படாத சந்தர்ப்பத்தில் அத்தகைய கட்டுமானத்தை இடித்தழிக்க அல்லது அப்புறப்படுத்தச் செய்விப்பதற்கு நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அதிகாரமளிக்கும் கட்டாய கட்டளையொன்றுக்காகவும் அதற்காக உறப்பட்ட தொகையை அறவிட்டுக் கொள்வதற்காகவும் நீதிவானுக்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) நீதிவான், நிகழ்வுகள் இருப்பதாக திருப்தியுற்றால் ஓராம் உட்பிரிவின் கீழ் நிறைவேற்றுப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறியுள்ள ஆளுக்கு அறிவித்தலைச் சேர்ப்பிக்கலா மென்பதுடன், நிறைவேற்றுப் பொறியியலாளரால்

விண்ணப்பிக்கப்பட்டவாறு அத்தகைய கட்டுமானத்தை இடித்தழிக்க அல்லது அப்புறப்படுத்த செய்விப்பதற்கு கட்டளையையும் ஆக்கலாம்.

(இ) கட்டுமானத்தை நிறுவியிருந்த ஆள் அத்தகைய கட்டுமானத்தை இடித்தழிப்பதனை அல்லது அப்புறப்படுத்துவதனை பொறுப்பேற்குமிடத்து நீதிவான் அவர் பொருத்தமானதென கருதினால் சாதாரண கால அவகாசம் அல்லது 60 நாட்களுக்கு விஞ்சாதவொரு காலப்பகுதி வழங்கப்படலாம்.

(4) (அ) சமய முக்கியத்துவம் வாய்ந்த கட்டுமானமொன்றை இடித்தழிப்பதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு கட்டாய கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ள விடத்தும் அத்துடன், அத்தகைய கட்டமைப்பு பாதுகாப்பாக அப்புறப்படுத்த இயலுமாக இருக்குமிடத்தும் அத்தகைய கட்டுமானத்தின் நிறுவுகைக்குப் பொறுப்பாக அமைப்பிற்கு அல்லது நிறுவனத்திற்கு அத்தகைய கட்டுமானத்தை அப்புறப்படுத்துவதற்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) சமய முக்கியத்துவம் வாய்ந்த கட்டுமானத்தை (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு நிறைவேற்றுப் பொறியியலாளரால் கையளிக்க இயலாதிருக்குமிடத்து, நீதிவானின் அறிவுறுத்தல்களின் மீது உரிய அவதானத்துடனும் கவனத்துடனும் கட்டுமானத்தை கையுதிர்த்தல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின் கீழ் கட்டாய கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ள விடத்து, அத்தகைய கட்டளையை நிறைவேற்றுகையில் நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அவசியமான எல்லா உதவிகளையும் வழங்குதல் பொலிசாரின் கடமையாதல் வேண்டும்.

(6) நீதிவானால் (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றி ஏதேனும் கட்டுமானத்தை இடித்தழிக்கையில் அல்லது அப்புறப்படுத்துகையில் அவரால் உறப்பட்ட எவையேனும் நியாயமான செலவுகளை அறவிடுவதற்கு நிறைவேற்றுப் பொறியியலாளர் உரித்துடையவராதல் வேண்டும்.

*கட்டடங்களுடனான காணிகளின் விடயத்தில் நட்டஈடு வழங்குதல்.*

51. நிருமாணிப்பு எல்லைகளுக்குள் உள்ள முழுமையான நிறுவுகையொன்று அல்லது அதன் பகுதியொன்று சார்பில் 29 ஆம் பிரிவின் கீழ் நட்டஈட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்படும் நட்டஈட்டுத் தொகையொன்றை உரிமையுள்ள ஆளுக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

*வீதியை தடைசெய்தல் அல்லது அத்துமீறுதல் முதலியன.*

52. (1) எவரேனும் ஆளினால் -

(அ) ஏதேனும் வீதி தடைசெய்யப்பட்டுள்ளது. அல்லது அத்துமீறப்பட்டுள்ளதென ; அல்லது
(ஆ) ஏதேனும் வீதியின் எல்லைக் கோடு அல்லது எல்லைகள் அல்லது நிருமாணிப்பு எல்லை தகுந்த அதிகாரமின்றி மாற்றப்பட்டுள்ளதென ; அல்லது
(இ) ஏதேனும் வீதி தகுந்த அதிகாரமின்றி அடைப்பு செய்யப்பட்டுள்தென;

நிறைவேற்றும் பொறியியலாளர் கருதின், அவரினால் அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் உடனடியாக குறித்த தடை, அத்துமீறுகை, அடைப்பு, மாற்றம் முதலியவற்றை அப்புறப்படுத்துமாறு குறித்த ஆளுக்கு எழுத்துமூல அறிவித்தலொன்றின் மூலம் பணிக்கலாம்.

(2) ஏதேனும் தடை, அத்துமீறுகை, அடைப்பு அல்லது மாற்றம் நிறைவேற்றுப் பொறியியலாளரால் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அப்புறப்படுத்தப்பட்டு பழைய நிலைக்கு கொண்டு வரப்படாதவிடத்து நிறைவேற்றுப் பொறியியலாளரினால் பழைய நிலைக்கு கொண்டுவர செய்வித்தல் வேண்டும். அவ்வாறு செய்கையில் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு அரசுக்கு வருமதியான தனிசு ஒன்றாக தவறாளரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் செயலாற்றும் போது ஏற்படுத்தப்படுகின்ற அல்லது ஏற்படுத்தப்படும் சாத்தியமுள்ள ஏதேனும் தடையின் அல்லது எதிர்ப்பின் காரணமாக விடயத்திற்கேற்ப தடையை, அத்துமீறுகையை, தடுப்பை அப்புறப்படுத்த அல்லது ஒதுக்கிவிட அல்லது அதனை பழைய நிலைக்கு கொண்டுவர இயலாதவராக இருக்குமிடத்து நிறைவேற்றுப் பொறியியலாளர் அதன் பொருட்டு விடயத்திற்கேற்ப அத்தகைய தடையை, அத்துமீறுகையை, தடுப்பை அல்லது மாற்றத்தைக் கீழிறக்குமாறும் அப்புறப்படுத்துமாறும் அல்லது ஒதுக்கிவிடுமாறும் அல்லது பழையநிலைக்கு கொண்டுவருமாறும் பிசுக்கால் அலுவலரைப் பணிக்கும் நீதிமன்றக் கட்டளையொன்றை கோரி நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(4) நீதிவான் ஒருவரால் 3 ஆம் உட்பிரிவின் கீழ் பிசுக்கால் அலுவலருக்கு கட்டளையொன்று ஆக்கப்பட்டவிடத்து, அவர் அதனை உடனடியாக நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர் அது நிறைவேற்றப்பட்ட முறையைப் பற்றிய விளக்கத்துடன் அத்தகைய நிகழ்வை நீதிமன்றத்திற்கு எழுத்தில் அறிக்கையிடுதலும் வேண்டும்.

*நில அளவை முதற்தோற் றளவிலான எண்பிப்பாதல்.*

53.மாகாணப் பணிப்பாளரின் அதிகாரத்தின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வரைபடம் அல்லது நில அளவை சாட்சியத்தில் ஏல் தகவாதல் வேண்டுமென்பதுடன், அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்றளவிலான எண்பிப்பாதலும் வேண்டும்.

*வீதியை பயன்படுத்து வதற்கான உரிமையைப் பாதுகாத்தல்.*

54. ஏதேனும் வீதியை ஏதேனும் தடையோ அல்லது வசதியீனமோ இன்றி பயன்படுத்துவதற்குப் பொதுமக்களுக்குள்ள உரிமைகளை அனுமதித்தலும் பாதுகாத்தலும் ஏதேனும் வீதியை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக மூடுவதனை அல்லது தடைசெய்வதனை கூடுமான வரை தடுத்தலும் மாகாணத் திணைக்களத்தின் கடமையாதல் வேண்டும்

*வீதியை சேதப்படுத்துதல், படங்களை தீட்டுதல் தவறொன்றாகும்.*

55.(1) சட்டமுறையான அதிகாரம் அல்லது காரணம் இல்லாமல் -

(அ) வண்டிப் பாதை அடங்கியுள்ள ஒரு வீதியின் ஏதேனும் பாகத்தில் வடிகால் ஒன்றைத் தோண்டுகின்ற அல்லது வேறு ஏதேனும் அகழ்வொன்றைச் செய்கின்ற; அல்லது

(ஆ) நிறைவேற்றுப் பொறியியலாளரின் சம்மதமின்றி ஒரு வீதியின் ஏதேனும் பாகத்திலிருந்து மண்ணை அல்லது புல் தரையை அப்புறப்படுத்துகின்ற ; அல்லது

(இ) ஒரு வீதியின் மேல் அதனைச் சேதப்படுத்தும் ஏதேனும் நெருப்பை எரிக்கின்ற அல்லது ஏதேனும் பொருளைக் கொட்டுகின்ற ; அல்லது

(ஈ) வாகனத்திலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் பொருட்கள் ஒரு வீதியின் வண்டிப்பாதையை சேதப்படுத்தும் அத்தகைய முறையில் வாகனங்களை ஓட்டுகின்ற ; அல்லது

(உ) வீதியொன்றின் மீது அல்லது அதன்மேல் பொருத்தப்பட்டுள்ள வீதி சமிஞ்ஞையொன்று அல்லது குறியீடொன்று அல்லது அவ்வாறே பொருத்தப்பட்டுள்ள கிலோ மீற்றரைக் குறிக்கும் கல் அல்லது விளக்குக் கம்பம் அல்லது திசைகாட்டும் குறியீடு அல்லது அத்தகைய ஏதேனும் உபகரணமொன்று அல்லது சமிஞ்சை விளக்கொன்று சட்டபூர்வமான அதிகாரம் அல்லது அங்கீகாரம் இன்றி திரிபுபடுத்துகின்ற சேதப்படுத்துகின்ற, உடைக்கின்ற, மாற்றுகின்ற ; அல்லது

(ஊ) வீதியொன்றின் ஏதேனும் வீதியிலுள்ள பொருளொன்றின் மீது படமொன்றை, எழுத்தொன்றை, குறியீடொன்றை, சிலையொன்றை, அறிவித்தற் பலகையொன்றை அல்லது வேறு ஏதேனும் குறியீடொன்றை ஒட்டுகின்ற அல்லது தீட்டுகின்ற அல்லது செதுக்குகின்ற

ஒவ்வோராளும் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் முதலாவது தவறொன்றின் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் இரண்டாவது அல்லது அதற்கடுத்த தவறின் விடயத்தில் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கும் அத்துடன் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) வீதியொன்றின் ஏதேனும் படமொன்றை, எழுத்தொன்றை, சமிஞ்ஞையொன்றை, சிலையொன்றை, அறிவித்தற் பலகையொன்றை அல்லது வேறு ஏதேனும் குறியீடொன்றை அல்லது அத்தகைய தடையொன்றை நிறைவேற்றுப் பொறியியலாளரினால் அப்புறப்படுத்துதல் சட்ட முறையானதாதல் வேண்டும்.

*வீதி அல்லது பாலமொன்றின் மீது கொண்டு செல்லக்கூடிய சுமையை மட்டுப்படுத்தல்*

56. (1) மாகாணப் பணிப்பாளர் ஏதேனும் வீதியின் மீது அல்லது அதன் பகுதியொன்றின் மீது அல்லது பாலமொன்றின் மீது எடுத்துச் செல்லக் கூடிய சுமை தொடர்பிலான தற்காலிகமான மட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் முதலாவது தவறொன்றின் விடயத்தில் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணம் ஒன்றிற்கும் இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறொன்றின் விடயத்தில் ஒரு லட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அத்துடன் தொடர்ந்து புரியப்படுகின்ற தவறொன்றின் விடயத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்

*அகழ்வு முதலியவற்றால் நடைபாதைக்குச் சேதம் அல்லது தடை ஏற்படுத்துதல்.*

57. (1) ஒரு வீதியின் நடைபாதைக்கு அல்லது ஒதுக்கத்திற்கு அல்லது பக்க சுவருக்கு -

(அ) அருகாமையிலுள்ள காணியில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் அகழ்வினால் அல்லது வேறு ஏதெனும் பக்கவிளைவாக ; அல்லது

(ஆ) வீதியின் மீது மோட்டார் வாகனமொன்று செலுத்தப்படுவதனால், இடரொன்று அல்லது விபத்தொன்று காரணமாக

சேதமடைந்திருக்குமிடத்து நிறைவேற்றுப் பொறியியலாளர் உடனடியாக சேதத்தைப் பழுதுபார்த்து, அவ்வாறு செய்கையில் அவரால் நியாயமாக உறப்பட்ட செலவுகளை காணியின் சொந்தக்காரரிடமிருந்து அல்லது சேதத்தை ஏற்படுத்துவதற்குப் பொறுப்பான ஆளிடமிருந்து அறவிடலாம்.

(2) அவ்வாறு செலுத்தத் தவறும் எவரேனும் ஆள் ஒருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் சேதம் சார்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிலுள்ள பெறுமதியை செலுத்துவதற்கும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) ஒரு வீதியின் நடைபாதையில் வாகனமொன்றை நிறுத்தி வைப்பதனால் தடைப்படுமிடத்து அவ்வாறு நிறுத்தி வைப்பதற்குப் பொறுப்பான ஆள் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறின் விடயத்தில் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் அத்துடன் தொடர்ந்து புரியப்படுகின்ற தவறொன்றின் விடயத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

வீதியை தடைசெய்தல் தவறொன்றாதல்.

58.(1) ஒரு வீதி வழியாக வாகனங்களின் அல்லது பாதசாரிகளின் போக்குவரத்தில் வேண்டுமென்றே தடை செய்கின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கும் இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் அத்துடன் தொடர்ந்து புரியப்படுகின்ற தவறொன்றின் விடயத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) மேல் ஓராம் உட்பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஆளெவரையும் பொலிஸ் அலுவலர் ஒருவர் பிடியாணையின்றி கைது செய்யலாம்.

வீதியில் மணல், மரக்கட்டைகள், இலைகள் முதலியவற்றைப் போடுதல் தவறொன்றாதல்.

59. (1) சட்டமுறையான அதிகாரம் அல்லது காரணம் இல்லாமல் ஒரு வீதியில் மணலை, கல்லை, மரக்கட்டையை அல்லது இலைகளை அல்லது கழிவுகளை அல்லது வேறு ஏதேனும் பொருட்களை போடுவது அல்லது களஞ்சியப்படுத்தும் ஒவ்வொருவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஏதேனும் வீதியொன்றின் வீதி வழியுரிமையில் அவ்வாறு போடப்பட்டுள்ள மணலின், கல்லின், மரக்கட்டையின் அல்லது வேறு ஏதும் பொருளை அப்புறப்படுத்துமாறு அல்லது வேறு இடமொன்றில் போடுமாறு அதன் சொந்தக்காரருக்குத் தேவைப்படுத்துவது நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அல்லது பொலிசு அலுவலருக்கு சட்ட முறையானதாதல் வேண்டும்.

(3) சொந்தக்காரர் இரண்டாம் உட்பிரிவில் தரப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுக தவறுமிடத்து தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் அத்துடன் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) சொந்தக்காரர் மூன்றாம் உட்பிரிவில் தரப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகி மணலை, கல்லை, மரக்கட்டடையை அல்லது அத்தகைய வேறேதும் பொருளை அப்புறப்படுத்த தவறுமிடத்து, அத்தகைய பொருளை பொலிஸ் அலுவலர் ஒருவரின் உதவியுடன் வீதிக்கு அப்பால் பொருத்தமான அமைவிடமொன்றுக்கு அப்புறப்படுத்தச் செய்வதும் அத்துடன் அப்புறப்படுத்துவதற்கான செலவுகளை சொந்தக்காரர்களிடமிருந்து அறவிடுவதும் நிறைவேற்றுப் பொறியியலாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

வீதி ஒதுக்கிட மொன்றினுள் அல்லது அதன் அருகில் மரங்களினதும் புதர்களினதும் நடுகையின் மீதான மட்டுப்பாடு.

60. (1) சட்டமுறையான அதிகாரமோ அல்லது காரணமோ இல்லாமல் ஒரு வீதியில் ஒரு வண்டிப்பாதையில், போக்குவரத்து மேட்டு இடத்தில், பாதையோரத்தில், அல்லது நடைபாதையில் மரமொன்றை அல்லது புதரை நடுகின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் அத்துடன் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அத்தகைய மரத்தை அல்லது புதரை மூன்று நாட்களுக்குள் அப்புறப்படுத்துமாறு அல்லது அப்புறப்படுத்தச் செய்யுமாறு அதனை நடுகை செய்த ஆளைத் தேவைப்படுத்துவது நிறைவேற்றுப் பொறியியலாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*மரங்கள், புதர்கள், புல், செடிகள் முதலியவற்றை நடுவதற்கு அனுமதி வழங்கலாம்.*

*61.(1)* சுற்றுவளைவு ஒன்றிற்குள் அல்லது போக்குவரத்து மேட்டிடமொன்றுக்குள் அல்லது ஒரு வீதியின் பாதையோரத்தின் வழியாக புதர்களையும் மரங்களையும் புல்லையும் செடிகளையும் நடுகை செய்து பேணுவதற்கு நிறைவேற்றுப் பொறியியலாளர் எவரேனும் ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்கு அனுமதி வழங்கலாம். அத்தகைய அனுமதியானது வாகனத்தினதும் பாதசாரிகளினதும் பாதுகாப்பு, வாகனப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் பாதுகாப்பு சாரதிகளுக்கு வீதியின் தெளிவான தோற்றம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு மரங்கள், புதர்கள், அத்துடன் செடிகள் என்பன குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய உயரத்திற்கு மாத்திரம் வளர்க்கப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்கு அமைய வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அனுமதி வழங்கப்பட்ட ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்கு அல்லது ஆட்களின் குழுவிற்கு நிலத்திலிருந்து 0.75 மீற்றரை விஞ்சாததுமான உயரத்திற்கு பெயரைச் சுட்டிக்காட்டுவதுமான பெயர்ப்பலகை வைப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

*ஒரு வீதியில் பொருட்களை கொட்டுதல் அல்லது நிறுவுதல் தவறொன்றென*

*62.* ஏதேனும் பொருளை அல்லது அழுக்கை ஒரு வீதியின் வண்டிப் பாதையில், நடைபாதையில் அல்லது பாதையோரத்தில் கொட்டுகின்ற அல்லது ஏதேனும் ஒதுக்கிடமொன்றினுள் கழிவுகளை அல்லது ஏதேனும் பொருளை இடுகின்ற அல்லது ஒரு சாவடியை, கூடத்தை அல்லது நிலையை நிறுவுகின்ற அல்லது ஒரு வீட்டில், கட்டடத்தில் அல்லது தோட்டத்திலிருந்து கழிவுநீரை அல்லது வேறு திரவக் கழிவை அல்லது வேறு ஏதேனும் பொருட்களை அல்லது எண்ணெய்யை அல்லது ஏதேனும் அத்தகைய திரவத்தை வீதியில் சிந்துகின்ற ஆளெவரும் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்கு ஆளாதால் வேண்டும்.

*வீதிகளுக்கு குறுக்கே தடைகளை நிறுவுதல்.*

*63.* ஆளெவரும் நிறைவேற்றுப் பொறியியலாளரின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் ஒரு வீதிக்கு குறுக்கே ஒரு வாயிற் கதவை அல்லது தடையை நிறுவுதலாகாது. ஒரு வாயிற் கதவை அல்லது தடையை அவ்வாறு நிறுவுகின்ற ஆளெவரும் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

*மண் வீதிக்கு கழுவி விடப்படுவதை தடை செய்தல்.*

*64.* நிறைவேற்றுப் பொறியியலாளர் ஒரு வீதியை அடுத்துள்ள காணியொன்றின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு எழுத்திலான அறிவித்தல் மூலம் வீதியை சேதப்படுத்துகின்ற அல்லது தடங்கல் செய்கின்ற விதத்தில் வீதிக்கு அல்லது அதன் நீர்க்கானுக்குள் அக்காணியிலிருந்து மண் அல்லது கழிவு கழுவப்படுவதை அல்லது எடுத்துச் செல்லப்படுவதை தடுப்பதற்கு அவசியமாகின்றவாறான அத்தகைய வேலைகளை அறிவித்தல் சேர்க்கப்பட்டதிலிருந்து இருபத்தெட்டு நாட்களுக்குள் மேற்கொள்ளுமாறு அவரைத் தேவைப்படுத்தலாம். குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அத்தகைய அறிவித்தலுக்கு பயனளிக்கத் தவறுகின்ற ஆளெவருவம் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*வீதிகளுக்கு குறுக்கேயுள்ள துருத்திகள் முதலியவற்றை அப்புறப்படுத்துவதற்கான தத்துவம்.*

*65.* நிறைவேற்றுப் பொறியியலாளர் ஏதேனும் கட்டடத்தின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அறிவித்தலின் மூலம் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாததும் ஒரு வீதியின் வழியாக வாகனங்களினதும் பாதசாரிகளினதும் பாதுகாப்பான போக்குவரத்திற்குத் தடங்களாயிருப்பதுமான மூடுமுன்றலை, துருத்திக் கொண்டிருக்கும் கூரையை, துருத்திக் கொண்டிக்கும் யன்னலை, படியை, சுவரை, வாயிற் கதவை, பெயர் பலகையை அல்லது ஏதேனும் அத்தகைய பொருளை அப்புறப்படுத்துமாறு அல்லது மாற்றுமாறு அவரைத் தேவைப்படுத்தலாம். நியாயமானதொரு காலத்திற்குள் அத்தகைய அறிவித்தல் ஒன்றுக்கு பயனளிக்கத் தவறுகின்ற ஆளெவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*தவறு புரியப்பட்டமை பற்றிய அறிவித்தல் நிறைவேற்றுப் பொறியிய லாளரினால் வழங்கப்படுதல்.*

*66. (1)* 62 ஆம் 63 ஆம் 64 ஆம் 65ஆம் பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் தவறொன்று புரியப்பட்டவிடத்து நிறைவேற்றுப் பொறியியலாளர், அத்தகைய நிகழ்வு பற்றி அறிவிக்கப்பட்டதன் மீது, தவறைப் புரியம் ஆள் தவறு புரியப்படுவது நிறுத்துவதற்கான அல்லது தவிர்ப்பதற்கான வழிமுறைகளை உடனடியாக எடுத்தல் வேணடுமென அவருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டதோ அந்த ஆள் அதன்கண்ணுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறினால் நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறின் விடயத்தில் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் அத்துடன் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) 62 முதல் 65 வரையிலான பிரிவுகளின் கீழ் தவறொன்று தொடர்ந்தும் புரியப்படுமிடத்தில் நீதிவான் தவறின் விடயப் பொருளான கட்டமைப்பை அல்லது பொருளை இடித்தழிப்பதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அதிகாரமளிக்கும் கட்டாயக் கட்டளையொன்றை வழங்கலாம். நிறைவேற்றுப் பொறியியலாளர் பொலிஸின் உதவியுடன் அத்தகைய கட்டுமானத்தை அல்லது பொருளை அப்புறப்படுத்துவித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு செய்வதில் உறப்பட்ட செலவைத் தவறாளரிடமிருந்து அறவிடுதலும் வேண்டும்.

*வீதிகள் வழியாகவுள்ள கதவுகளை அல்லது வாயிற் கதவுகளை வெளிப்புறமாகத் திறத்தல் ஆகாது.*

*67. (1)* ஆளெவரும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் வழங்கப்படும் நிறைவேற்றுப் பொறியியலாளரின் எழுத்திலான சம்மதத்துடன் தவிர, வீதியொன்றுக்கு வெளிப்புறம்பாக திறக்கும் விதத்தில் எவையேனும் வளவுகளில் ஏதேனும் கதவை அல்லது வாயிற் கதவை அமைத்தலாகாது.

(2) கதவு அல்லது வாயிற் கதவொன்று ஓராம் உட்பிரிவுக்கு முரணாக அமைக்கப்பட்டுள்ளவிடத்து நிறைவேற்றுப் பொறியியலாளர் இருப்பாட்சியாளருக்கான அறிவித்தல் மூலம் வீதியில் வெளிப்புறமாக திறக்காத வகையில் கதவை அல்லது வாயிற் கதவை மாற்றுமாறு அவரைத் தேவைப்படுத்தலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த ஆள் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து பதின்நான்கு நாட்களுக்குள் அறிவித்தலின் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறினால் அவர் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டுமென்பதுடன், குறித்த கதவை அல்லது வாயிற் கதவை மேல் ஓராம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றுமாறு நீதிவான் பணிக்கலாம்.

*வீதிகளுக்கு மேலாகத் தொங்கிக் கொண்டிருக்கும் மரங்களை வெட்டுதலும் வெட்டி வீழ்த்துதலும்.*

68.(1) ஒரு வீதிக்கு மேலாக மரம், புதர் அல்லது புதர் வேலியொன்று வாகனங்களின் அல்லது வீதியின் பயன்படுத்துநர்கள் எவரினதும் போக்குவரத்தை தடைசெய்யும் முறையில் அல்லது அதற்கு ஆபத்தாக அமையும் முறையில் தொங்கிக் கொண்டிருக்குமிடத்து அல்லது வாகனங்களின் சாரதிகளின் பார்வையில் அல்லது பொது விளக்கொன்றிலிருந்து வரும் ஒளியில் குறுக்கிடுமிடத்து நிறைவேற்றுப் பொறியியலாளர் மரம், புதர் அல்லது புதர் வேலி அமைந்துள்ள காணியின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு வழங்கப்படும் அறிவித்தல் மூலம் விடயத்திற்கேற்ப ஆபத்துக்கான ஏதுவை அல்லது குறுக்கீட்டை அப்புறப்படுத்தும் வகையில் ஏழு நாட்களுக்குள் அதனைத் தவிர்க்குமாறு அல்லது வெட்டுமாறு அவரைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறும் பட்சத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளர் செய்யப்பட வேண்டுமென அறிவித்தலால் தேவைப்படுத்தப்பட்ட வேலையை நிறைவேற்றலாமென்பதுடன், அவ்வாறு செய்வதில் உறப்பட்ட நியாயமான செலவை அத்தகைய ஆளிடமிருந்து அறவீடு செய்யலாம்.

(3) மேல் (1) இல் குறிப்பிடப்படுள்ள சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் குறித்த தடையை அப்புறப்படுத்த வில்லையாயின் அது தவறொன்றாகுமென்பதோடு, நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறின் விடயத்தில் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் அத்துடன் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் குறித்த தடையை அப்புறப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிலுள்ள பெறுமதியை செலுத்துவதற்கும் ஆளாதலும் வேண்டும்.

*வீதிகளில் அலைந்து திரிவதற்கு விலங்குகளை அனுமதித்தல் தவறொன்றாதல்.*

69. (1) ஒரு வீதியின் அல்லது அதன் ஒதுக்கிடமொன்றிற்குள் ஏதேனும் நேரத்தில் விலங்கொன்று அலைந்து திரிவதாக அல்லது படுத்திருப்பதாக காணப்படின் அதன் காப்பாளர் அல்லது சொந்தக்காரர் அல்லது இருவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாக காணப்பட்ட ஆளெவரும் நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், முதற்தடவையாக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) அலைந்து திரியும் அல்லது ஏதேனும் விலங்குகளை நிறைவேற்றுப் பொறியியலாளர் அதிகாரமளிக்கப்பட்ட விலங்குகள் பிடிப்பவரால் கைப்பற்றுதல் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட விலங்குகளைப் பிடிப்பவருக்குச் சொந்தமானதும் அல்லது அவரால் வாடகைக்கு எடுக்கப்பட்டதுமான வளவில் கட்டி வைக்கப்படுதலும் வேண்டும்.

ஆயினும், அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட விலங்குகள் பிடிப்பாளர் நிறைவேற்றுப் பொறியியலாளருடன் உடன்படிக்கையொன்றைச் செய்திருத்தல் வேண்டுமென்பதுடன், அவரால் கைப்பற்றப்படும் அத்தகைய விலங்கு ஒவ்வொன்று பற்றியும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கும் அத்தகைய இடத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கும் உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) இவ்வாறு விலங்குகளை அலைந்து திரிவதற்கு இடமளித்து வீதிக்கு ஏதேனும் விதத்தில் இடையூறு விளைவிக்கும் ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாகக் காணப்படுவதோடு, நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறின் விடயத்தில் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் அத்துடன் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா குற்றப்பணமொன்றுக்கும் குறித்த விலங்கின் பாதுகாப்பான கட்டுக்காவல் உட்பட உணவு வழங்குகை தொடர்பில் நிறைவேற்று பொறியியலாளரினால் உறப்பட்ட செலவுகளை அறவிட்டுக் கொள்வதற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) நிறைவேற்றுப் பொறியியலாளர் கைப்பற்றப்பட்ட விலங்குகளின் பாதுகாப்பான கட்டுக்காவலை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விலங்குகளின் உணவு வழங்குகை தொடர்பிலும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(6) கைப்பற்றப்பட்ட அத்தகைய விலங்குகள் எதுவும் நீதிவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணத்தின் கொடுப்பனவு உட்பட நிறைவேற்றுப் பொறியியலாளரினால் உறப்பட்ட செலவுகளை செலுத்துவதன் மீதல்லாமல் சொந்தக்காரருக்கு ஒப்படைக்கப்படுதலாகாது.

(7) அத்தகைய குற்றப்பணம் விதிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஆளெவரும் விலங்கை உரிமை கோராவிடினும் குற்றப்பணத்தைச் செலுத்தாவிடினும் விலங்கை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தலும் அத்தகைய விற்பனையிலிருந்தான வரும்படிகளை விலங்கினை கைப்பற்றுதல், உணவு விநியோகித்தல் என்பன தொடர்பில் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் நியாயமாக உறப்பட்ட செலவுகள் அறவிடப்பட்டதன் பின்னர், மாகாணசபை நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவது சட்டமுறையானதாதலும் வேண்டும்.

வீதிகளின் மீது பொருட்களை, வெடி பொருட்களை கொட்டுதல் அல்லது வீசுதல் தவறொன்றாதல்.

70. (1) ஆளெவரும் சட்டமுறையான அதிகாரமோ அல்லது காரணமோ இன்றி வீதி அல்லது வீதி ஒன்றின் மீது ஏதேனும் விதத்தில் வாகனமொன்றுக்கு சேதம் அல்லது அதில் செல்பவருக்கு அல்லது வீதியைப் பயன்படுத்துபவருக்கு காயம் ஏற்படுவதற்கு அல்லது ஆபத்து விளைவிக்கும் சாத்தியமுள்ள வகையில் -

(அ) எதனையும் எறிவாறாயின் ; அல்லது

(ஆ) ஏதேனும் நெருப்பை பற்றவைக்கும் அல்லது வெடிபொருளொன்றை பற்றவைப்பாராயின் ; அல்லது

(இ) ஏதேனும் அழுக்கினை, குப்பை கூளத்தை அல்லது துர்நாற்றம் வீசும் பொருளொன்றை இடுவதற்கு அல்லது வழிந்தோடுவதற்கு இடமளிப்பாராயின் ; அல்லது

(ஈ) அபாயத்தை ஏற்படுத்துகின்றவாறான கயிறொன்றை அல்லது ஏதேனும் உபகரணத்தை வைப்பாராயின்.

அவர் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறின் விடயத்தில் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் அத்துடன் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

வீதியொன்றின் மீது காரக்கட்டை முதலியவற்றை நிறுவுவதற்காக உரிமத்தைப் பெற்றுக் கொள்ளல்.

71. (1) ஆளெவரும் ஏதேனும் கட்டடம் தொடர்பில் அல்லது ஏதேனும் கட்டடத்தை தரைமட்டமாக்குதல் அல்லது மாற்றுதல், பழுதுபார்த்தல் பேணல் அல்லது துப்பரவு செய்தல் தொடர்பில் அவர் அவ்வாறு செய்வதற்கு நிறைவேற்றுப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினால் அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலன்றியும் உரிமத்தின் நியதி, நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகினாலன்றியும் வீதியை தடை செய்கின்ற ஏதேனும் காரக்கட்டை அல்லது வேறு கட்டமைப்பை வீதியொன்றில் அல்லது அதன் மேல் நிறுவுதலோ அல்லது விட்டு வைத்தலோ ஆகாது.

(2) கட்டுமானமொன்றின் தொடர்பில் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் உரிமம் ஒன்று வழங்குகையில் நிருமாணிப்பிற்குரிய விபரங்களை வழங்குவதற்கு அத்தகைய ஆள் கட்டுப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, வீதிக்கு தடையாக இல்லையென நிறைவேற்றுப் பொறியியலாளர் திருப்தியுறுதல் வேண்டும். உரிமப்பத்திரம் ஒன்று வழங்குகையில் -

(அ) இருளடைந்த நேரங்களில் நிருமாணிப்பதற்கு போதியளவு ஒளியேற்றப்பட்டிருப்பதை உறுதி செய்தலும் ;

(ஆ) வீதி பக்கமாகவுள்ள பகுதியில் சிவப்புநிற கொடியொன்றை காட்சிப்படுத்தலும் ; அத்துடன்

(இ) ஏதேனும் வாகனப் போக்குவரத்து கட்டுப்பாட்டு உபகரணங்களை நிறுவுதல் அல்லது பேணுதல் தொடர்பிலும் ;

நிபந்தனைகளை விதித்துரைக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது நியாயமான காரணமில்லாமல் இரண்டாம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் நியதிகளுக்கு இணங்கியொழுக தவறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

வீதியொன்றின் வழியே கட்டடப் பொருட்கள் முதலியவற்றை போட்டுவைப்பதற்கு சம்மதம் பெற வேண்டுமென்பது

72. (1) ஆளொருவர் அல்லது நிறுவனமொன்று நிறைவேற்றுப் பொறியியலாளரின் எழுத்துமூல சம்மதத்துடன் வீதியொன்றின் மீது கட்டடப் பொருட்களை அல்லது வேறு பண்டங்களை தற்காலிகமாக போட்டு வைக்கலாம். அல்லது அதன் மீது தற்காலிகமாக அகழ்வுகளைச் செய்யலாம்.

(2) அத்தகைய சம்மதத்துடன் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் -

(அ) கட்டடப் பொருட்களை தற்காலிகமாக இறக்கும் போது வாகனப் போக்குவரத்துப் பகுதிக்கு தடை ஏற்படாதிருப்பதற்கும்;

(ஆ) பண்டங்களை இறக்கும் போது, ஏற்றும் போது அல்லது வீதிக்கு அல்லது வீதி ஒதுக்கத்துக்கு அல்லது போக்குவரத்து மேட்டிடத்திற்கு அல்லது கால்வாய் முறைமைக்கு சேதம் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அத்தகைய சேதங்கள் ஏற்பட்டால் அத்தகைய ஆளினால் நிறைவேற்றுப் பொறியலாளருக்கு கொடுப்பனவினைச் செய்ய வேண்டுமெனவும்;

(இ) நிறைவேற்றுப் பொறியியலாளரினால் பொருத்தமெனக் கருதும் முக்கியமாக பயன்பாட்டுச் சேவைகளுக்கான சேதங்களைத் தடுத்தல் அல்லது அவற்றின் நுழைவினைச் சான்றுப்படுத்தல் தொடர்பிலும் ;

நிபந்தனைகள் ஆக்கப்படலாம்.

(3) போட்டு வைக்கின்ற அல்லது அகழ்வுகளைச் செய்கின்ற ஆள் அத்தகைய போட்டு வைத்தல் அல்லது அகழ்வு தொடர்பில் வாகனப் போக்குவரத்து சமிஞ்சைகளின் நிறுவுகை மற்றும் பேணல் தொடர்பாக அவருக்கு நிறைவேற்றுப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(4) ஆளொருவர் வீதியொன்றில் எவையேனும் கட்டடப் பொருட்களை அல்லது வேறு பொருட்களை போட்டு வைக்கின்றவிடத்து அல்லது அகழ்வு செய்கின்றவிடத்து அவர் -

(அ) தடைக்கு அல்லது அகழ்வுக்கு தகுந்த விதத்தில் வேலியிடச் செய்வித்தலும் இருள்சூழ்ந்த நேரங்களில் தகுந்த விதத்தில் ஒளியேற்றச் செய்வித்தலை உறுதிசெய்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) நிறைவேற்றுப் பொறியியலாளரால் தேவைப்படுத்தப்படும் தடையை அகற்றுதல் அல்லது அகழ்வை நிரப்புதல் வேண்டும்

என்பதுடன் மேலதிகமாக அவர் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் அனுமதிக்கப்பட்டதை விட நீடித்த காலப்பகுதிக்கு வீதித் தடையை அகழ்வை தொடர்ந்திருக்கவிடுதலுமாகாது.

(5) (அ) ஓராம் உட்பிரிவின் கீழ் எந்த நிபந்தனைகளுக்கு அமைய சம்மதம் வழங்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் நிபந்தனைகளுடன் நியாயமான ஏது அல்லது காரணமின்றி இணங்கியொழுகத் தவறுகின்ற; அல்லது

(ஆ) நியாயமான ஏது அல்லது காரணமின்றி (3) ஆம் உட்பிரிவின் கீழ் அவர் மீது சுமத்தப்பட்ட கடமையை நிறைவேற்றத் தவறுகின்ற;

(இ) நான்காம் உட்பிரிவின் கீழ் அவர் மீது சுமத்தப்பட்ட கடமையொன்றை நிறைவேற்றத் தவறுகின்ற;

ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் மீறுகை அல்லது தவறுகை இடம்பெறுகின்ற நாள் ஒவ்வொன்று தொடர்பிலும் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

வீதி வேலைகளை நிறைவேற்றும் போது எடுக்கப்பட வேண்டிய முற்பாதுகாப்புகள்.

73. (1) வீதியொன்றில் வேலைகளை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாயிருக்கும் ஆளொருவர் அல்லது ஒப்பந்தக்காரர் ஒருவர் -

(அ) வேலை பூர்த்தியடையும் வரை வாகனப் போக்குவரத்திற்காக அபாயத்தை தடுப்பதற்கும் வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் அபாயம் பற்றி வாகனப் போக்குவரத்துக்கு எச்சரிக்கை விடுப்பதற்கும் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் தேவைப்பட்டவாறான அத்தகைய தடைகளையும் வாகனப் போக்குவரத்து சமிஞ்சைகளையும் நிறுவ வேண்டுமென்பதோடு, வேலை பூர்த்தியடைந்தவுடன் உடனடியாக அவற்றை அப்புறப்படுத்துதலும் வேண்டும்.

(ஆ) வேலைகள் நடைபெறும் இடத்தை தகுந்த விதத்தில் பாதுக்காக்கச் செய்வித்தலையும் இருள்சூழ்ந்த நேரங்களில் ஒளியேற்றச் செய்வித்தலையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள் அல்லது ஒப்பந்தக்காரர் ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுக தவறுவாராயின் அவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் தவறு தொடர்ந்துறும் நாள் ஒவ்வொன்று தொடர்பிலும் ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) சட்டபூர்வமான அதிகாரம் அல்லது காரணம் இல்லாமல் -

(அ) வீதியொன்றினைப் பயன்படுத்தும் பாவனையாளர்களுக்கு ஏதேனும் தடையைப் பற்றி எச்சரிக்கை விடுக்கும் நோக்கத்திற்கு அல்லது வீதியினை பயன்படுத்துபவர்களை தடையொன்றிலிருந்து எழும் ஆபத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கத்திற்கு (1) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி நிறுவப்பட்ட அல்லது வைக்கப்பட்ட ஏதேனும் தடையை, வாகனப் போக்குவரத்து சமிஞ்சையை அல்லது ஒளியை கீழ் இறக்குகின்ற, அகற்றுகின்ற அல்லது மாற்றுகின்ற ; அத்துடன்

(ஆ) அவ்வாறு வைக்கப்பட்ட ஒளியை அணைத்து விடுகின்ற;

ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

வீதியொன்றுக்கு சேதம் ஏற்படுத்தும் பற்சக்கரங்களுடனான வாகனங்களை செலுத்துதல் அல்லது அத்தகைய எவற்றையேனும் இழுத்துச் செல்லுதல் தவறொன்றென்பது.

74. எவரேனும் ஆளொருவரினால் அல்லது சாரதியொருவரினால் வீதி சேதமடையக்கூடிய விதத்தில் அல்லது தோண்டப்படக்கூடிய விதத்திலுள்ள கூரான அல்லது பற்களுடனான அல்லது பற் சக்கரங்கள் பொருத்தப்பட்ட வாகனங்களை செலுத்துவது அல்லது வீதியொன்றின் மேற்பகுதி கீறும் விதத்தில், சேதமடையும் விதத்தில் அல்லது தோண்டப்படக் கூடிய விதத்தில் உலோகப் பொருளொன்று அல்லது மரம்சார்ந்த பொருளொன்று இழுத்துச் செல்லும் ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் VII

## மொழி பற்றிய ஏற்பாடுகளும் விசேட தத்துவங்களும்

அறிவித்தலுக்கான மொழிகள்.

75.(1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் சேர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல் ஒவ்வொன்றும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இருத்தல் வேண்டும்.

(2) எவரேனும் ஆளொருவருக்கு முகவரியிடப்பட்ட அறிவித்தல் ஒவ்வொன்றும் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது அத்தகைய ஆளுக்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படலாம் அல்லது அத்தகைய அறிவித்தல் அவரது வீட்டின் உறுப்பினர் சிலரிடம் சேர்ப்பிக்கப்படலாம் அல்லது அது அவரது வீட்டில் துலாம்பரமான பகுதியில் ஒட்டி வைக்கப்படலாமென்பதுடன், மேற்போந்த முறைகளில் சேர்க்கப்பட்ட அறிவித்தலொன்று நேரடியாக உரிய முறையில் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

நிருமாணிப்புகள் முதலியவற்றைக் கட்டுப்படுத்துதல்.

76.(1) ஆளெவரும் நிறைவேற்றுப் பொறியியலாளரின் சம்மதமின்றி ஏதேனும் வீதியொன்றின் மீது, அதன் வழியே அல்லது அதற்கு குறுக்கே ஏதேனும் வாகனப் போக்குவரத்து சமிஞ்ஞையை, உத்தரத்தை, குழாயை, வடத்தை, கம்பியை இரும்புத் தூண் விளம்பரப் பலகையை, தண்டவாளத்தை அல்லது இதனையொத்த வேறு உபகரணத்தை வைத்திருத்தலோ அல்லது பொருத்துதலோ ஆகாது.

(2) ஆளெவரும் நிறைவேற்றுப் பொறியியலாளரின் சம்மதமின்றி ஏதேனும் வீதியொன்றின் கீழ் சுரங்கத்தை, குழியை அல்லது அத்தகைய ஏதேனும் விடயத்தை நிருமாணித்தல் ஆகாது.

(3) ஆளெவரும் நிறைவேற்றுப் பொறியியலாளரின் சம்மதமின்றி வீதியொன்றின் நடுவிலிருந்து 20 மீற்றர் தூரத்திற்குள் மூன்று மீற்றர்களை விஞ்சிய ஆழத்தில் அகழ்வு எதனையும் மேற்கொள்ளுதல் ஆகாது.

(4) ஆளெவரும் அல்லது நிறுவனம் எதுவும் நிறைவேற்றுப் பொறியியலாளரின் சம்மதமின்றி ஏதேனும் பாலத்தின், மதகின் கட்டுமானத்தின் விளிம்பு ஓரத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திற்குள் அல்லது அதன் அருகில் மணல் அகழ்வை மேற்கொள்ளுதலாகாது.

(5) மேல் (1) ஆம் (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏற்படக்கூடிய அல்லது ஏற்பட்ட சேதம் சம்பந்தமாக பாதுகாப்பு வைப்பொன்றை பெற்றுக் கொள்வதற்கு அல்லது அதன் சார்பில் மதிப்பிடப்படும் நட்டத்தை அவ்வாறு செய்யும் ஆளிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு இயலுமானதாதல் வேண்டும்.

(6) (1) ஆம் (2) ஆம் (3) ஆம் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் அல்லது நிறுவனம் எதுவும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

77.(1) ஆளெவரும் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் வழங்கப்படும் அங்கீகாரமின்றி ஏதேனும் அணுகுபாதையை ஏதேனும் வீதிக்கு இணைத்தலாகாது. வீதியொன்றை அணுகுவதனை மட்டுப்படுத்துதல்.

(2) அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படும் போது நிறைவேற்றுப் பொறியியலாளரினால் -

(அ) நீர் வழிந்தோடுவதற்கு தடையேதும் இல்லாதிருத்தல்;

(ஆ) கால்வாய்க்கு அல்லது பக்க சுவருக்கு அல்லது போக்குவரத்து மேட்டிற்கு சேதம் ஏற்படாதிருத்தல்;

(இ) அணுகுபாதையை இணைக்கும் போது வீதிக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அதனை மீள் நிலைப்படுத்து வதில் உறப்பட்ட செலவை அறவிடுதல்

பற்றியும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும். அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட இணைப்பை அகற்றுவதன் மூலம் வீதியை அதன் முன்னைய நிலைக்கு மீள் நிலைப்படுத்துவதில் நிறைவேற்றுப் பொறியியலாளரினால் உறப்பட்ட செலவை நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு செலுத்துவதற்கு ஆட்படுதலும் வேண்டும்.

78. எழுத்திலான வேறேதும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எவ்வாறு இருப்பினும், ஏதேனும் வீதிக்கு அருகாமையில் ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உரிமம் அளிக்கும் எவரேனும் தனியாள், அதிகாரசபை அல்லது நிறுவனம் அத்தகைய உரிமத்தை வழங்குவதற்கு முன்னர் நிறைவேற்றுப் பொறியலளாரின் சம்மதத்தைப் பெறுவது அவரது அல்லது அதனது கடமையாதல் வேண்டும். நிறைவேற்றுப் பொறியியலாளரின் அங்கீகாரம் இன்றியமையாததாதல்.

79. தத்தமது நியாயாதிக்கங்களுக்குள் இந்த நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக புரியப்படக்கூடிய ஏதேனும் தவறை தடுப்பதில் உதவி ஒத்தாசை புரிவது எல்லா பொலிஸ் அலுவலர்களினதும் பிரதேச செயலாளர்களினதும் மற்றும் கிராம அலுவலர்களினதும் கடமையாதல் வேண்டும். ஏதேனும் தவறை தடுப்பதில் அலுவலர்களுக் குள்ள கடமை.

80.(1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமத்தை அல்லது எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் எதனையும் மேற்கொள்ளும் அல்லது அவற்றிற்குப் பயனளிக்கும் நோக்கத்திற்கென அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். அமைச்சருக்கு ஒழுங்குவிதிகளை ஆக்கலாமென.

(2) அமைச்சர் குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் தமக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் பின்வரும் எல்லா கருமங்கள் அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்,அதாவது -

(அ) வீதியொன்றின் இயலளவு மற்றும் வீதியின் தன்மை முதலியவற்றைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு, மணல், கல், மண் அல்லது அத்தகைய கனிமப் பொருளொன்றை கொண்டு செல்வதன் காரணமாக வீதியொன்றுக்கு ஏற்படக்கூடிய சேதம், திருத்த வேலைகளுக்காக உறப்படும் செலவினை மீளளிப்பதற்கு இயலுமாகும் வகையில் குறித்த பொருளைக் கொண்டு செல்லும் வாகனங்களிலிருந்து கட்டணமொன்றை அறவிடுதல்

(ஆ) இந்த நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் மீறுகை பற்றி அறிவித்தல் கொடுப்பதற்கு பயன்படுத்தப்படவுள்ள படிவங்கள்

(இ) வீதியொன்றின் இருபக்கங்களிலும் தேவையற்ற அபிவிருத்திகளை தடுத்தல்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அரசாங்க வர்த்தமானியில் IV ஆம் பகுதியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர், இயலுமானவரை விரைவில் அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதோடு, அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எந்தத் திகதியிலிருந்து அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ, அந்தத் திகதியைப் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியின் IV ஆம் பகுதியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

81. இந்த நியதிச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கு மிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

வடமேல் மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 1 ஆம் நியதிச்சட்டம் இல்லாதொழியுமென.

82. இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து வட மேல் மாகாண மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மாகாண பிராந்திய வீதி அபிவிருத்தி அதிகாரசபை நியதிச்சட்டமானது இல்லாதொழிக்கப்படும்.

## பாகம் VIII

## பொருள்கோடல்

பொருள்கோடல்.

83. இந்த நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி -

"ஆளுநர்" என்னும் போது வடமேல் மாகாண ஆளுநர் எனவும்

"மாகாண சபை" என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபை எனவும்

